بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ
وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 7

இதழ் 30

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

துல்ஹஜ் 28 - ஹிஜ்ரி கமரி 1443 ★ வஃபா 28 - ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ★ 28 ஜுலை 2022

## அல்லாஹ்வின் கட்டளை

وَذَرِ الَّذِیۡنَ اتَّخَذُوۡا دِیۡنَہُمۡ لَعِبًا وَّلَہۡوًا وَّغَرَّتۡہُمُ الۡحَیٰوۃُ الدُّنۡیَا

**பொருள் :**

தங்கள் மார்க்கத்தை ஒரு விளையாட்டாகவும், பொழுதுபோக்காகவும் ஆக்கிக் கொண்டு உலக வாழ்க்கையின் ஏமாற்றத்திற்குள்ளானவர்களை நீர் விட்டுவிடுவீராக.

( அல் அன் ஆம் : 71 )

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## உலகவாதி மற்றும் பேராசை கொண்டவருக்கு உயர்ந்த மாட மாளிகையில் கூட கிடைக்கமுடியாத உண்மையான மகிழ்ச்சியை இறையச்சமுடையவரால் ஒரு குடிசையில் பெற்றுக் கொள்ள முடியும்.

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

மனிதன் உலகில் வேறு என்ன விரும்புகின்றான்? என்பதை சீர்தூக்கிப் பாருங்கள். உலகில் தனக்கு இன்பமும், நிம்மதியும் கிடைக்க வேண்டும் என்பதே மனிதனின் மாபெரும் ஆசையாகும். அதற்கு இறைவன் ஒரேயொரு வழியை மட்டுமே வைத்துள்ளான். அது இறையச்சத்தின் வழி என்றழைக்கப்படுகிறது. வேறொரு வார்த்தையில் கூறுவதாக இருந்தால் அதனை திருக்குர்ஆனின் வழி என்று கூறலாம். அல்லது அதற்கு ஸிராத்தே முஸ்தகீம் (நேரான பாதை) என்று பெயர் வைக்கப்படுகின்றது. நிராகரிப்பாளர்களிடம் செல்வமும், சொத்துகளும் இருக்கின்றன. அவர்கள் ஆடம்பரத்திலும், சுகபோகங்களிலும் திளைத்து மூழ்கி இருக்கின்றனரே! என்று எவரும் கூறவேண்டாம். நான் உண்மையாகவே கூறுகின்றேன். உலகின் கண்களில் இன்னும் கூறப்போனால், இழிவான உலகவாதிகள் மற்றும் உலக வணங்கிகளின் கண்களில் அவர்கள் மகிழ்ச்சியாக இருப்பதாக தெரிகின்றது. ஆனால், உண்மையில் அவர்கள் ஓர் எரிச்சலிலும், துன்பத்திலும் மூழ்கி இருக்கின்றனர். நீங்கள் அவர்களின் வெளித்தோற்றத்தையே பார்த்துள்ளீர்கள். ஆனால், நான் அவர்களின் உள்ளங்களை பார்க்கின்றேன். அவர்கள் ஒரு சுடர்விட்டெரியும் நெருப்பாலும், (இரும்புச்) சங்கிலிகளாலும், கழுத்து விலங்குகளாலும் சூழப்பட்டுள்ளனர் என்று அல்லாஹ் கூறுகின்றான்.

اِنَّاۤ اَعۡتَدۡنَا لِلۡکٰفِرِیۡنَ سَلٰسِلَا۠ وَ اَغۡلٰلًا وَّ سَعِیۡرًا

அவை எப்படிப்பட்ட சங்கிலிகள் என்றால், அந்த சங்கிலிகளின் காரணமாக விலங்குகள் மற்றும் மிருகங்களை விட மிகவும் மோசமானவர்களாக ஆகிவிடும் அளவில் அவர்கள் புதையுண்டு கிடக்கின்றனர். அவர்களின் பார்வைகள் எப்போதும் உலகத்தின் மீதே இருக்கின்றன. பூமியின் பக்கம் குனிந்து கொண்டே செல்கின்றனர். பின்னர் உள்ளுக்குள்ளேயே ஓர் ஆற்றாமையும், எரிச்சலும் இருந்து கொண்டே இருக்கின்றது. அவர்களால் நன்மையின் பக்கம் வரவே முடியாது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 380, காதியான் பதிப்பு 2018)

* * * * *

## நபிமொழி

**செல்வச் செழிப்பும், நீண்ட ஆயுளும் பெறுவதற்கான வழிமுறை :**

(2067) ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியதைக் கேட்டேன். அன்னார் (ஸல்) கூறினார்கள். ஒருவர் தனது செல்வத்தில் வளம் கிடைக்கவேண்டும் என்று விரும்பினால், (மேலும், நன்மைகளுக்கு அதிகமான சந்தர்ப்பம் தமக்கு கிடைக்க வேண்டும்) அல்லது தமக்கு நீண்ட ஆயுள் கிடைக்க வேண்டும் என்று விரும்பினால் அவர் உறவினர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளட்டும்.

(ஸஹீஹ் புகாரி, தொகுதி 4, பாடம்-வியாபாரம், காதியான் வெளியீடு-2008)

* * * * *

## முதன் முதலில் குழந்தையின் காது செயல்பட துவங்குகின்றது. பின்னர் அதன் கண்கள், பின்னர் இறுதியாக சிந்தனை ஆற்றல் செயல்படத் துவங்குகின்றது என்பதை இன்று அறிவியல் நிரூபணம் செய்துள்ளது.

وَاللّٰہُ اَخۡرَجَکُمۡ مِّنۡۢ بُطُوۡنِ اُمَّہٰتِکُمۡ لَا تَعۡلَمُوۡنَ شَیۡـًٔا ۙ وَّجَعَلَ لَکُمُ السَّمۡعَ وَالۡاَبۡصَارَ وَالۡاَفۡـِٕدَۃَ ۙ لَعَلَّکُمۡ تَشۡکُرُوۡنَ

( அந்நஹ்ல் : 79 )

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கமளித்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள் :

அல்லாஹ் கூறுகின்றான்: மக்களே! நாம் உங்களின் தாய்மார்களின் வயிறுகளிலிருந்து, நீங்கள் அறியாதவர்களாக இருந்த நிலையில், நீங்கள் அறிவை கற்றுக் கொள்ளவேண்டும் என்பதற்காக உங்களுக்கு காதுகளையும், உள்ளங்களையும் வழங்கி உங்களை உலகில் அனுப்பியுள்ளோம், ஆனால், அந்த அருட்கொடையிலிருந்து எந்த பயனையும் பெறவில்லை. கண்களால் பார்க்கவும் இல்லை. காதுகளால் கேட்கவுமில்லை. உள்ளத்தைக் கொண்டு சிந்திக்கவுமில்லை. இந்த வாக்கியத்தில் கருணையும், வேதனையும் நிரம்பியுள்ளது. வல்லமை மிக்க இறைவன், தனது அடியார்களை தண்டனைக்கு தகுதியானவர்களாக ஆக்கிய அவர்களின் கவனக்குறைவைக் கண்டு எவ்வளவு அன்பு நிறைந்த சொற்களில் வேதனையை வெளிப்படுத்துகின்றான்!

இந்த வசனத்திற்கு சூராவின் கட்டுரையுடன் இருக்கும் தொடர்பு என்னவென்றால் இதில் இறை வஹீயின் அவசியத்திற்கான மற்றோர் ஆதாரம் வழங்கப்பட்டுள்ளது. அது இவ்வாறாகும். அதாவது, மனிதன் பிறக்கும் போது எல்லா வகையான அறிவிலிருந்து அவன் வெறுமையாக இருக்கின்றான். ஆனால், மனிதன் அறிவை கற்க வேண்டும் என்பதற்காக இறைவன் அவனுக்கு கண்ணையும், காதையும், உள்ளத்தையும் வழங்கி அவனை படைக்கின்றான். அவற்றின் உதவியால் மனிதன் கல்வி பயில்கிறான். எனவே இறைவனால் வழங்கப்பட்ட வழிமுறைகள் மூலமாக மனிதன் உலக அறிவுகளை கற்கின்றான். அல்லாஹ்வால் வழங்கப்பட்ட இந்த வழிமுறைகளுக்கு எனக்கு அவசியமில்லை. நான் சுயமே கல்வி பயில்வதற்குரிய வழிமுறைகளை உருவாக்கிக் கொள்வேன் என்று கூறக்கூடிய எந்த மனிதனும் இல்லை. அவ்வாறிருக்க, ஆன்மீக ஞானத்தைக் கற்பதற்கு அல்லாஹ் உருவாக்குகின்ற வழிமுறைகளை பயன்படுத்துவதை அவன் ஏன் நிராகரிக்கின்றான்? இந்த வசனத்தில் காதுகளுக்குப் பிறகு கண்களைப் பற்றியும், கண்களுக்குப் பிறகு உள்ளங்களைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது. இதே வரிசைகிரமத்தின் அடிப்படையில் இந்த உறுப்புகள் மனிதனின் அறிவை அதிகரித்துக் கொள்வதற்கு காரணியாக அமைகின்றன.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 4, பக்கம் 208, காதியான் பதிப்பு 2010)

* * * * *

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

## ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபா ராஷித், சித்தீக்கே அக்பர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் சிறப்புகள் மற்றும் உயர் அந்தஸ்து

ஹஸ்ரத் அலாஃ [ரலி] அவர்கள் கூறினார்கள்: மக்களே! அஞ்ச வேண்டாம். நீங்கள் முஸ்லிம்கள் இல்லையா? நீங்கள் அல்லாஹ்வின் வழியில் ஜிஹாது செய்வதற்கு வரவில்லையா? நீங்கள் அல்லாஹ்வின் உதவியாளர்கள் இல்லையா? உங்களுக்கு நற்செய்தி உண்டாகட்டுமாக. ஏனென்றால், உங்களின் நிலைமையில் இருக்கும் மக்களை அல்லாஹ் ஒருபோதும் கைவிடுவதில்லை.

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாத்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 24 ஜுன் 2022,** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு இஹ்ஸான் மாதம் **24ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்தில் நிகழ்ந்த போர்திட்டங்களைக் குறித்து கூறப்பட்டு வந்தது. கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக அனுப்பப்பட்ட ஏழாவது படையை குறித்து கிடைத்த விளக்கத்தின்படி, ஹஸ்ரத் காலித் பின் ஸயீத் பின் ஆஸ் (ரலி) அவர்கள் கிளர்ச்சியாளர்களுக்கெதிரான அந்தப் படையில் அனுப்பட்டிருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் காலித் பின் ஸயீத் பின் ஆஸ் (ரலி) அவர்களுக்காக கொடியை கட்டினார்கள். சிரியாவின் எல்லைப் பகுதியான ஹம்கதைன் எனும் இடத்திற்கு அன்னாரை அனுப்பினார்கள். (தாரீகுத் தபரி தொகுதி 2, பக்கம் 57, வெளியீடு தாருல் குதுபில் இல்மியா லெப்னான், 2012)

ஹஸ்ரத் காலித் பின் ஸயீது பின் ஆஸ் (ரலி) அவர்களின் அறிமுகம் இவ்வாறாகும். அன்னார் (ரலி) அவர்களின் பெயர் காலித், சுட்டுப் பெயர் அபூ ஸயீது. அன்ாார் (ரலி) அவர்களின் தந்தையின் பெயர் ஸயீது பின் ஆஸ் பின் உமைய்யா. (அன்னார் (ரலி) அவர்களின்) தாயார் பெயர் லுபைய்னா பின்த் ஹபாப் ஆகும். அவர் உம்மே காலித் என்ற பெயரால் பிரபல்யமாகியிருந்தார். (அஸதுல் காபா தொகுதி 2, பக்கம் 124, வெளியீடு தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2008)

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் இஸ்லாத்தின் ஆரம்பத்திலேயே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களைச் சார்ந்தவர் ஆவார்கள். அன்னார் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்குப் பிறகு இஸ்லாத்தை ஒப்புக்கொண்டார்கள். மேலும் அன்னார் மூன்றாவது அல்லது நான்காவது முஸ்லிமாக இருந்தார்கள் என்று சிலர் கூறுகின்றனர். அன்னார் (ரலி) அவர்கள் ஐந்தாவது முஸ்லிமாக இருந்தார்கள் என்று வேறு சில மக்கள் கூறுகின்றனர். அன்னார் (ரலி) அவர்களுக்கு முன்பாக அதுவரை, ஹஸ்ரத் அலி பின் அபீ தாலிப் (ரலி), ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா, மற்றும் ஹஸ்ரத் சஅத் பின் அபீ வகாஸ் (ரலி) ஆகியோர் மட்டுமே இஸ்லாத்தை தழுவியிருந்தார்கள்.

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட சம்பவம் பற்றிய குறிப்பு இவ்வாறு கிடைக்கின்றது. அதாவது, கனவில் அன்னார் (ரலி) நெருப்பின் விளிம்பில் நிற்கின்றார்கள். அன்னாரின் தந்தை அன்னாரை நெருப்பில் தள்ளுவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கின்றார் என்று கனவில் கண்டார்கள். மேலும் அன்னார் (ரலி) அவர்கள் நெருப்பில் வீழ்ந்து விடமால் இருக்க ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், அன்னார் (ரலி) அவர்களின் இடுப்பை பிடித்துக் கொண்டிருப்பதாகவும் அன்னார் கனவில் கண்டார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் பதற்றமடைந்து கண்விழித்தார்கள். மேலும், அல்லாஹ்வின் மீது ஆணையாக! இந்தக் கனவு உண்மையாகும் என்று அன்னார் (ரலி) அவர்கள் கூறினார்கள். பின்னர் அன்னார் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை சந்தித்தார்கள். அப்போது, தனது கனவை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கூறினார்கள். உமக்கு நன்மை செய்வதற்கான எண்ணம் கொள்ளப்பட்டுள்ளது. உம்மை காப்பாற்ற வேண்டும் என அல்லாஹ் விரும்புகின்றான் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அன்னார், அதாவது முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் ஆவார்கள்.

அன்னார் (ஸல்) அவர்களை பின்பற்றுங்கள். ஏனென்றால், நீர் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு அன்னார் (ஸல்) அவர்களைப் பின்பற்றினால் அவர் உம்மை நெருப்பில் வீழ்வதிலிருந்து காப்பாறுவார். உமது தந்தை நெருப்பில் வீழ்ந்து கிடக்கின்றார் என்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். எனவே அன்னார் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவில் அஜ்யாத் என்ற இடத்தில் இருந்தார்கள். மக்காவில் ஸஃபா குன்றுடன் இணைந்துள்ள ஓரிடத்தின் பெயர் அஜ்யாத் ஆகும், அங்குதான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஆடுகள் மேய்த்து வந்தார்கள்.

முஹம்மது (ஸல்) அவர்களே! தாங்கள் யார் பக்கம் அழைக்கின்றீர்கள்? என்று ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு, தனித்தவனும், எந்த இணையுமற்ற அந்த இறைவனின் பக்கமும், மேலும், முஹம்மது (ஸல்) அவனது அடியாரும், தூதரும் ஆவார் என்பதன் பக்கமும் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். மேலும், கேட்காத, பார்க்காத, மேலும் எந்த தீங்கும், நன்மையும் செய்ய முடியாத இந்த சிலைகளை வணங்குவதை நீங்கள் விட்டுவிடுங்கள். தம்மை யார் வணங்குகின்றார்? யார் வணங்குவதில்லை என்பதை அவர்கள் அறிவதில்லை என்றும் கூறினார்கள். அப்போது, அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்கு தகுதியானவர் வேறு எவருமில்லை என்றும், மேலும் தாங்கள் (ஸல்) அல்லாஹ்வின் தூதர் ஆவீர்கள் என்றும் நான் சாட்சி கூறுகிறேன் என்று ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை தழுவியதால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு ஒளிந்து கொண்டார்கள். அன்னார் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை தழுவியதை அன்னாரின் தந்தை அறிந்த

போது, அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளாத தமது மகன்களை அன்னாரை தேடுவதற்காக அனுப்பி வைத்தார். எனவே அவர்கள் சென்று அன்னாரை தேடினர். மேலும் அன்னாரை பிடித்து, தமது தந்தையிடம் கொண்டு வந்தனர். அன்னாரின் தந்தை, ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களை ஏசிபேசினார். மேலும், அடிக்கத் தொடங்கினார். அவரது கையிலிருந்த தடியால் அவரை அடித்தார். எந்த அளவுக்கு என்றால், அடித்து, அடித்து அன்னாரின் தலையை உடைத்துவிட்டார். மேலும், நீ முஹம்மது (ஸல்) அவர்களை ஏற்றுக் கொண்டுவிட்டாய். அவரது சமுதாயம் அவரை எதிர்ப்பதை நீ பார்த்த பிறகும் அவ்வாறு செய்துள்ளாய். மேலும், அந்த மக்களின் தெய்வங்களின் குறைகளையும், அவர்களின் முன்னோர்களின் குறைகளையும் எடுத்துரைப்பவர்களை அவர்கள் எதிர்ப்பதை நீ பார்க்கின்றாய். அதன் பிறகும் நீ இவ்வாறு செய்துள்ளாய் என்று அவரது தந்தை கூறினார். அதற்கு, ஹஸ்ரத் காலித் (ரலி) இவ்வாறு பதிலளித்தார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் அன்னார் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொண்டுவிட்டேன். அந்த பதிலால் அன்னாரின் தந்தை கடுமையாக கோபமடைந்தார். மேலும், முட்டாளே! என் பார்வையிலிருந்து தொலைந்துவிடு. எங்கு செல்ல விரும்புகிறாயோ சென்றுவிடு. நான் உனது உணவை நிறுத்திவிடுவேன் என்று அவர் கூறினார். அதற்கு, நீங்கள் எனது உணவை நிறுத்திவிட்டால் பின்னர் நான் உயிருடன் இருப்பதற்கு அல்லாஹ் எனக்கு உணவளிப்பான் என்று ஹஸ்ரத் காலித் (ரலி) கூறினார்கள்.

எனவே அன்னாரது தந்தையார், அன்னாரை வீட்டிலிருந்து வெளியேற்றிவிட்டார்கள். உங்களில் எவரும் அவருடன் பேசக் கூடாது என்று தமது மகன்களிடம் கூறிவிட்டார்கள். எனவே அன்னார் (ரலி) அவர்கள் அங்கிருந்து வெளியேறிவிட்டார்கள். மேலும், இறைத் தூதர் (ஸல்) அவர்களுடனேயே இருந்து வந்தார்கள். தம்மை மீண்டும் பிடித்து, தமக்கு அவர்கள் தொல்லை கொடுக்க கூடாது என்பதற்காக பொதுவாக அன்னார் (ரலி) அவர்கள் மக்காவின் சுற்றுப் பகுதியில் தமது தந்தையிடமிருந்து ஒளிந்து மறைந்து வாழ்ந்து வந்தார்கள்.

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களின் தந்தை முஸ்லிம்கள் மீது மிக அதிகமாக அநீதியிழைக்கக் கூடியவராக இருந்தார். மேலும், மக்காவில் கண்ணியமிக்கவர்களைச் சார்ந்தவராக இருந்தார். ஒருமுறை அவர் நோய்வாய்ப்பட்டார். அப்போது நோயின் கடுமையின் காரணமாக, அல்லாஹ் எனக்கு இந்த நோயிலிருந்து குணம் வழங்கிவிட்டான் என்று அவர் கூறினார். அல்லாஹ் என்று அவர் கூறினாரா அல்லது தமது சிலைகளின் பெயரைக் கூறினாரா என்பது தெரியவில்லை. அப்போது, இப்னு அபீ கப்ஷா அதாவது முஹம்மது (ஸல்) அவர்களின் இறைவணக்கம் மக்காவில் நடக்காது. இங்கிருந்து நான் அனைத்து முஸ்லிம்களையும் வெளியேற்றிவிடுவேன். நான் அந்த அளவிற்கு அவர்கள் மீது கடினம் காட்டுவேன் என்றும் அவர் கூறினார். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள், இது குறித்து அறிந்தபோது அல்லாஹ்வே! நீ அவருக்கு குணமளிக்காதே என்று தமது தந்தைக்கு எதிராக அன்னார் (ரலி) அவர்கள் துஆ செய்தார்கள். எனவே அவர் அதே நோயிலேயே மரணித்துவிட்டார்.

முஸ்லிம்கள் அபிசீனியாவை நோக்கி இரண்டாவது முறை ஹிஜ்ரத் செய்தபோது, ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களும், அந்த முஸ்லிம்களுடன் சென்றுவிட்டார்கள். அன்னாருடைய மனைவி உமைய்யா பின்த் காலித் குஸாஇயா அவர்களும் அன்னார் (ரலி) அவர்களுடன் இருந்தார்கள். கைபர் போர்க் காலத்தில் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் ஜஃபர் பின் அபீ தாலிப் (ரலி) அவர்களுடன் அபிசீனியாவிலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். கைபர் போரில் அன்னார் (ரலி) கலந்து கொள்ளவில்லை. ஆயினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போர் செல்வங்களில் அன்னாருக்கும் பங்கு கொடுத்தார்கள். அதன் பிறகு, உம்ரதுல் கஸா, மக்கா வெற்றி, ஹுனைன் போர், தாயிஃப் மற்றும் தபூக் போன்ற அனைத்து போர்களிலும் அன்னார் (ரலி), ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்தார்கள். (அஸதுல் காபா தொகுதி 2, பக்கம் 124-125, பதிப்பு தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2008)

அன்னார் (ரலி) அவர்களால் பத்ர் போரில் கலந்து கொள்ள முடியவில்லை. அந்த இழப்பை எண்ணி அன்னார் (ரலி) அவர்கள் எப்போதும் வருந்தி வந்தார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எங்களால் தங்களுடன் இணைந்து பத்ர் போரில் கலந்து கொள்ள முடியவில்லை என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் கூறப்பட்டது. அதற்கு, (மற்ற)மக்களுக்கு ஒரு ஹிஜ்ரத்திற்கான நற்கூலியும், உங்களுக்கு இரண்டு ஹிஜ்ரத்திற்கான நற்கூலியும் கிடைப்பதை நீங்கள் விரும்பவில்லையா? என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அத்தபகாத் இப்னு சஅத் தொகுதி 2, பக்கம் 75, பதிப்பு தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2012)

தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன் எனும் நூலில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபா (ரலி) அவர்கள் குறிப்பிட்டுள்ள வஹீயை எழுதியவர்களின் பெயர்களில் ஹஸ்ரத் காலித் பின் ஸயீத் பின் ஆஸ் (ரலி) அவர்களின் பெயரும் உள்ளது. (தீபாச்சா தப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம், தொகுதி 20, பக்கம் 425)

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், ஏமனிலிருந்து சதக்காக்களை வசூல் செய்வதற்காக ஹஸ்ரத் காலித் பின் ஸயீத் (ரலி) அவர்களை நியமித்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மரணம் வரை அந்தப் பதவியை அன்னார் (ரலி) அவர்கள் வகித்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு அன்னார் (ரலி) அவர்கள் மதீனாவிற்கு வந்துவிட்டார்கள். அப்போது, நீங்கள் ஏன் திரும்பி வந்துவிட்டீர்கள்? என்று அன்னாரிடம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு, நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு யார் சார்பாகவும் பணி செய்ய விரும்பவில்லை என்று அன்னார் (ரலி) அவர்கள் கூறினார்கள். அன்னார் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்வதில் தாமதித்தார்கள் என்று கூறப்படுகிறது. ஆனால், பனூ ஹாஷிம் பைஅத் செய்தவுடன் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்துவிட்டார்கள். பின்னர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் படைகளுக்கு அன்னாரை அமீராக நியமித்து அனுப்பி வைத்தார்கள்.

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில் மர்ஜுஸ் ஸுஃப்பர் என்ற போரில் ஷஹீது ஆனார்கள். ஹிஜ்ரி 14ஆம் ஆண்டில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தின் துவக்கத்தில் நடைபெற்ற மர்ஜுஸ் ஸுஃப்பர் என்ற போரில் அன்னாரின் ஷஹாதத் சம்பவம் நிகழ்ந்ததாக சில மக்கள் கூறுகின்றனர். சிரியா நாட்டில் நிகழ்ந்த அஜ்னாதைன் எனும் போரில், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மரணிப்பதற்கு 24 நாட்களுக்கு முன் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் ஷஹீது ஆனார்கள் என்று கூறப்படுகிறது. (அஸதுல் காபா தொகுதி 2, பக்கம் 125-பதிப்பு தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2008)

முர்தத்களுக்கு எதிராக ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் மேற்கொண்ட போர்களின் விளக்கம் தாரீகே தபரி எனும் நூலில் இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் முர்தத்களை ஒடுக்குவதற்காக கொடிகளை கட்டியபோது, தேர்ந்தெடுக்க வேண்டியவர்களை தேர்ந்தெடுத்து விட்டார்கள். ஹஸ்ரத் காலித் பின் ஸயீத்

(ரலி) அவர்களும், அந்த நபர்களில் ஒருவராக இருந்தார்கள். அன்னார் (ரலி) அவர்களை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் படைக்கு அமீராக நியமிப்பதை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தடுத்தார்கள். மேலும் தாங்கள் இவருக்கு எந்த பணியும் கொடுக்காதீர்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், முடியாது என்று கூறிவிட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கருத்தை ஏற்கவில்லை. தய்மாஃவில் உதவிப் படையில் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களை பணி அமர்த்தினார்கள்.

சிரியா மற்றும் மதீனாவிற்கு இடையில் உள்ள ஒரு பிரபல்யமான நகரம் தய்மாஃ ஆகும். எனவே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் காலித் பின் ஸயீத் (ரலி) அவர்களுக்கு தய்மாஃவிற்கு செல்லும்படி கட்டளை வழங்கினார்கள். மேலும், உங்களது இடத்திலிருந்து விலகக் கூடாது என்றும், அக்கம் பக்கத்தில் இருக்கும் மக்களை உங்களுடன் இணைந்து கொள்வதற்கு அழைப்பு கொடுங்கள் என்றும், முர்தத் ஆகாத நபர்களை மட்டுமே ஏற்றுக் கொள்ளவேண்டும் என்றும், எனது கட்டளைகள் வந்தடையும் வரை உம்முடன் போர் புரிபவர்களைத் தவிர வேறு எவருடனும் நீர் போர் புரியக் கூடாது என்றும் அன்னார் (ரலி) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் தய்மாஃவில் தங்கினார்கள். சுற்றுவட்டாரத்திலிருந்த ஏராளமான கூட்டத்தினர் அன்னாரை வந்து சந்தித்தார்கள். முஸ்லிம்களின் இந்த பெரும் படையைக் குறித்த செய்தி ரோமானியர்களுக்கு கிடைத்தது. அப்போது, தமது தாக்கத்தின் கீழ் இருந்த அரேபியர்களிடம் சிரியா போருக்காக படைகளை கேட்டனர். ரோமானியர்களின் தயாரிப்பு மற்றும் அரபு கோத்திரங்களின் வருகை தொடர்பாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களுக்கு தகவல் கொடுத்தார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இவ்வாறு பதில் எழுதினார்கள் :

நீங்கள் முந்திக் கொள்ளுங்கள். சற்றும் பயப்படவேண்டாம். அல்லாஹ்விடம் உதவி வேண்டுங்கள்.

இந்த பதில் கிடைத்ததும் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள், எதிரிகளை நோக்கி முன்னேறினார்கள். அவர்கள் அருகில் சென்றடைந்ததும், எதிரிகளிடம் எப்படிப்பட்ட திகில் உருவானது என்றால், அவர்கள் தமது இடத்தை காலிசெய்துவிட்டு இங்கும், அங்கும் சிதறுண்டுவிட்டனர். ஓடிவிட்டனர். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள், எதிரிகளின் இடத்தை கைப்பற்றிக் கொண்டார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களிடம் ஒன்றுகூடியிருந்த பெரும்பாலான மக்கள் முஸ்லிம்களாகிவிட்டனர். இந்த வெற்றியைக் குறித்த தகவலை ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு வழங்கினார்கள். நீங்கள் முன்னேறிச் செல்லுங்கள். ஆயினும், எதிரி பின்னால் இருந்து தாக்குதல் நடத்துவதற்கு சந்தர்ப்பம் கிடைத்துவிடும் அளவிற்கு முன்னால் சென்றுவிடாதீர்கள் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எழுதினார்கள். (தாரீகுத் தபரி தொகுதி-2, பக்கம் 331-332, பதிப்பு தாருல் குதுபில் இல்மியா லெப்னான் 2012)

வரலாற்று நூல்களிலிருந்து ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில் முர்தத்களுக்கு எதிராக ஹஸ்ரத் காலித் பின் ஸயீது (ரலி) அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து இவ்வளவு தான் குறிப்பு கிடைக்கின்றது. இதைத் தவிர, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்தில் கிடைத்த சிரியா வெற்றிகளின் குறிப்புகளில் அன்னாரின் பங்களிப்பு எதிர்காலத்தில் எடுத்துரைக்கப்படும்.

முர்தத்களான கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான எட்டாவது போர்படை ஹஸ்ரத் துரைஃபா பின் ஹாஜிஸ் (ரலி) அவர்களின் படையாகும். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் துரைஃபா பின் ஹாஜிஸ் (ரலி) அவர்களுக்காக ஒரு கொடியைக் கட்டினார்கள். பனூ சலீம் மற்றும் பனூ ஹாவாஸின் ஆகியோருக்கு எதிராக போர்புரியும்படி அன்னாருக்கு கட்டளை வழங்கினார்கள். (தாரீகுத் தபரி தொகுதி 2, பக்கம் 57 பதிப்பு தாருல் குதுபில் இல்மியா லெப்னான் 20120)

ஓர் அறிவிப்பில் வருகிறது: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பனூ சுலைம் மற்றும் பனூ ஹவாஸினுடன் போரிடுவதற்கு மஃன் பின் ஹாஜிஸை அனுப்பினார்கள். எவ்வாறிருப்பினும் அல்லாமா இப்னு அப்துல்பிர், அல்இஸ்தீஆப் எனும் நூலில் ஹஸ்ரத் துரைஃபா மற்றும் மஃன் அவர்களின் தந்தைபெயர் ஹாஜிஸ் பெயரை அதாவது ஸா என்ற எழுத்துடன் குறிப்பிட்டுள்ளார்கள். மேலும் அல்லாமா இப்னு அஸீர் அவர்கள் அஸதுல் காபாவில் ஹாஜிர் அதாவது ரா என்ற எழுத்துடன் குறிப்பிட்டுள்ளார்கள்.

(அல்காமில் ஃபீத்தாரீக் தொகுதி 2, பக்கம் 207-தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2006)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, ஹஸ்ரத் துரைஃபா பின் ஹாஜிஸ் அவர்களை இஸ்லாத்தில் நிலைத்திருந்த பனூ சுலைமைச் சார்ந்த அரேபியர்களுக்கு ஆளுநராக நியமித்தார்கள். அன்னார் (ரலி) அவர்கள் தூய மற்றும் உணர்வுமிக்க ஊழியராக இருந்தார்கள். அன்னார் (ரலி) அவர்கள் எப்படிப்பட்ட உணர்ச்சி மிக்க சொற்பொழிவு நிகழ்த்தினார்கள் என்றால் பனூ சுலைமைச் சார்ந்த ஏராளமான அரேபியர்கள் அன்னாரை வந்து சந்தித்தார்கள். (ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் அரசாங்க கடிதங்கள் பக்கம் 33)

மற்றோர் அறிவிப்பில் உள்ளது. இந்த அறிவிப்பை ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அபீ பக்ர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அதாவது, பனூ சுலைமின் நிலைமை எப்படி இருந்தது என்றால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு அவர்களில் பலர் முர்தத் ஆகிவிட்டனர். நிராகரிப்பின் பக்கம் திரும்பிசென்றுவிட்டனர். அவர்களில் சில நபர்கள் தமது கோத்திரத்தின் அமீர் மஃன் பின் ஹாஜிஸ் அல்லது துரைஃபா பின் ஹாஜிஸுடன் இஸ்லாத்தில் உறுதிப்பாட்டுடன் நிலைநின்றார்கள். ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் துலைஹாவுக்கு எதிராக போரிட புறப்பட்டபோது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், பனூ சுலைமைச் சார்ந்த இஸ்லாத்தில் நிலைத்திருக்கும் நபர்களை அழைத்துக் கொண்டு ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களிடம் செல்லுங்கள் என்று மஃன் அவர்களுக்கு எழுதினார்கள்.

(தாரீகுத் தபரி தொகுதி 2 பக்கம் 266, பதிப்பு தாருல் குதுபில் இல்மியா லெப்னான் 2012)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அபீபக்ர் (ரலி) அவர்களிடமிருந்தே மற்றோர் அறிவிப்பும் கிடைக்கிறது. அதாவது, பனூ சுலைமைச் சார்ந்த ஒரு நபர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் வந்தார். அவன் ஃபுஜாஃ என்றழைக்கப்பட்டான். அவனது பெயர் இயாஸ் பின் அப்தில்லாஹ் ஆகும். ஃபுஜாஃ என்ற சொல்லில் திடீரென என்ற பொருளும் அடங்கியுள்ளது. ஏனென்றால், அந்த நபர் (கடந்த காலத்தில்) பயணிகள் மற்றும் கிராமவாசிகளின் மீது திடீர் தாக்குதல் நடத்தி அவர்களை கொள்ளையடித்து வந்தான். எனவே அவனது பெயர் ஃபுஜாஃ என்று ஆகிவிட்டது. எவ்வாறிருப்பினும் அந்த நபர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் வந்தார். மேலும், நான் முஸ்லிம் ஆவேன். நிராகரிப்பாளர்களில் புறக்கணிப்பை மேற்கொண்ட மக்களுக்கு எதிராக நான் ஜிஹாது செய்ய விரும்புகிறேன். தாங்கள் (ரலி), எனக்கு கால்நடைகளை வழங்குங்கள். எனக்கு உதவி செய்யுங்கள் எனக் கேட்டான். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அவனுக்கு கால்நடைகளையும், ஆயுதங்களையும் வழங்கினார்கள். ஓரிடத்தில் இதன் விளக்கம் இவ்வாறு கிடைக்கிறது: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அவனுக்கு இரண்டு குதிரைகள் அல்லது மற்றோர் அறிவிப்பின்படி, முப்பது ஒட்டகங்களையும், முப்பது போர் வீரர்களுக்கான ஆயுதங்களையும் வழங்கினார்கள். மேலும், ஆயுதங்களை

ஏந்திய பத்து முஸ்லிம்களையும் அவனுடன் அனுப்பினார்கள். அவன் அங்கிருந்து சென்றுவிட்டான். பின்னர் தமக்கு முன்னால் வரும் முஸ்லிம் அல்லது முர்தத் நபரிடம் இருந்து அவரின் செல்வங்களை பறித்துக் கொண்டான். எவர் மறுப்பாரோ அவரை அவன் கொன்று வந்தான். எல்லாருடனும் அவன் அவ்வாறே செய்து வந்தான். முஸ்லிம்களையும் கொலை செய்து வந்தான். ஷஹீதாக்கி வந்தான். அவனுடன் பனூ ஷரீர் கோத்திரத்தின் ஒருவனும் இருந்தான். அவன் நஜ்பஃ அபூ மய்ஸா என்று அழைக்கப்பட்டான். ஓர் அறிவிப்பில் வருகிறது. ஃபுஜாஃ தனது கோத்திரத்தாரிடம் சென்றான். வழியில் முர்தத் ஆன அரேபியர்களை தன்னுடன் இணைத்துக் கொண்டான்.

அவனது கூட்டம் அதிகமானபோது அவன் முதலில் முஸ்லிம் தோழர்களைக் கொன்றான். மேலும் அவர்கள் அனைவருடைய செல்வத்தையும் கொள்ளையடித்து விட்டான். பின்னர் அவன் கொள்ளையடிக்கத் தொடங்கிவிட்டான். அவர்கள் சில சமயம் ஒரு கோத்திரத்தை கொள்ளையடித்தனர். சில சமயம் வேறு கோத்திரத்தை கொள்ளையடித்து வந்தனர். அந்த தகவல் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு கிடைத்தபோது, அன்னார் (ரலி) அவர்கள் துரைஃபா பின் ஹாஜிஸ் அவர்களுக்கு எழுதினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அந்தக் கட்டளையை உண்மையில் மஃன் என்பவருக்கு அனுப்பினார்கள். அவர் தமது சகோதரர் துரைஃபாவை அனுப்பிவைத்தார் என்று சிலர் கூறுகின்றனர்.

எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதினார்கள்: இறைவனின் எதிரி ஃபுஜாஃ என்னிடம் வந்தான். நான் முஸ்லிம் என்று அவன் கூறினான். நான் இஸ்லாத்தை புறக்கணித்து சென்றவர்களுக்கு எதிராக வலிமையை உருவாக்க விரும்புகிறேன் என்ற கோரிக்கையை முன்வைத்தான். எனவே நான் அவனுக்கு கால்நடைகளையும், ஆயுதங்களையும் கொடுத்தேன். தற்போது, அல்லாஹ்வின் இந்த எதிரி முஸ்லிம்கள் மற்றும் முர்தத்களிடம் சென்று அவர்களின் செல்வங்களை பறித்து வருவதாகவும், மறுப்பவர்களை அவன் கொன்றுவிடுவதாகவும் எனக்கு உறுதியாக தெரிய வந்துள்ளது. எனவே நீங்கள் உங்களுடன் இருக்கும் முஸ்லிம்களை அழைத்துக் கொண்டு சென்று அவனை கொலை செய்துவிடுங்கள் அல்லது அவனை கைது செய்து என்னிடம் அனுப்பிவிடுங்கள்.

மற்றோர் அறிவிப்பில் உள்ளது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் துரைஃபாவின் உதவிக்காக ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் கைஸ் (ரலி) அவர்களையும் அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் துரைஃபா பின் ஹாஜிஸ் (ரலி) அவனை எதிர்கொள்வதற்கு சென்றார்கள்.

இரண்டு கூட்டத்தினரும் தங்களுக்குள் மோதிக் கொண்டபோது, முதலில் அம்புகளால் மட்டும் போர் நிகழ்ந்தது. ஓர் அம்பு நஜ்பஃ பின் அபூ மய்ஸாஃவை தாக்கியது. அதனால் அவன் மாண்டுபோனான். முஸ்லிம்களின் வீரத்தையும், உறுதிப்பாட்டையும் ஃபுஜாஃ கண்டபோது, நீர் இந்தப் பணிக்கு என்னை விட அதிக தகுதி படைத்தவர் இல்லை. நீரும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களால் நியமிக்கப்பட்ட அமீர் ஆவீர். நானும் அன்னாரால் நியமிக்கப்பட்ட அமீர் ஆவேன் என்று அவன் ஹஸ்ரத் துரைஃபாவிடம் கூறினான். மிக தந்திரமாக அவன் அந்தப் போரை நிறுத்துவதற்கு முயற்சி செய்தான். ஹஸ்ரத் துரைஃபா (ரலி) அவர்கள், அவனிடம் கூறினார்கள்: நீர் உண்மையாளர் என்றால் ஆயுதங்களை கீழே வைத்துவிடும். உம்மை பிடித்து வருவதற்காகவே என்னை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அனுப்பியுள்ளார்கள். எனவே ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு என்னுடன் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் வாரும். நீர் அமீரா? இல்லை நான் அமீரா? என்று அங்கேயே முடிவெடுக்கப்பட்டுவிடும்.

எனவே ஃபுஜாஃ ஹஸ்ரத் துரைஃபா (ரலி) உடன் மதீனாவிற்கு புறப்பட்டான். இருவரும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் வந்தபோது, இவனை பகீஃயிற்கு கொண்டு செல்லுங்கள். மேலும், நெருப்பில் எரித்துவிடுங்கள் என்று ஹஸ்ரத் துரைஃபா (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கட்டளையிட்டார்கள். அவன் முஸ்லிம்களுடன் இதேபோன்று நடந்திருந்தான். எனவேதான் அவனுடன் அவ்வாறு நடந்து கொள்ளப்பட்டது. எனவே அன்னார் (ரலி) அவர்கள் நெருப்பை மூட்டினார்கள். அதில் அவனை எறிந்துவிட்டார்கள்.

ஓர் அறிவிப்பில் வருகிறது. அதாவது, போரின்போது ஃபுஜாஃ ஓடிவிட்டான். அப்போது, ஹஸ்ரத் துரைஃபா (ரலி) அவர்கள் துரத்தி சென்று அவனை கைது செய்தார்கள். மேலும், அவனை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் அனுப்பி வைத்தார்கள். அவன், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை வந்தடைந்தபோது அன்னார் (ரலி) அவர்கள் மதீனாவில் அவனுக்காக ஒரு நெருப்பினை மூட்டி ஒளிமயமாக்கி வைத்திருந்தார்கள். அவனது கை, கால்களை கட்டி அதில் அவனை வீசிவிட்டார்கள். (தாரீகே தபரி, தொகுதி 2, பக்கம் 266, பதிப்பு தாருல்குதுபில் இல்மியா லெப்னான் 2012)

முர்தத் ஆன கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான பத்தாவது போர்ப்படை என்பது ஹஸ்ரத் அலாஃ பின் ஹழ்ரமி (ரலி) அவர்களுடையதாகும். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அலாஃ பின் ஹழ்ரமி (ரலி) அவர்களிடம் ஒரு கொடியை கொடுத்தார்கள். மேலும் பஹ்ரைன் செல்லும்படி அன்னாருக்கு கட்டளையிட்டார்கள். (தாரீகுத் தபரி தொகுதி 2, பக்கம் 257 பதிப்பு தாருல் குதுபில் இல்மியா லெப்னான் 2012)

யமாமா மற்றும் பாரசீக வளைகுடாவிற்கு மத்தியில் அமைந்துள்ள இடம் பஹ்ரைன் ஆகும். அது இன்றைய நாட்களில் உள்ள சிறிய பஹ்ரைன் இல்லை. மாறாக, மிகவும் பரந்துபட்ட பகுதியாக இருந்தது. அதன் தலைநகரமாக தாரைன் இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்த முன்ஸிர் பின் ஸாவா அவர்கள் அங்கு ஆட்சியாளராக இருந்தார்கள். இந்த இரண்டு பஹ்ரைன்கள் அல்லது சவுதி அரேபியாவை அல்அஹ்ஸா என்று கூறுகின்றார்கள். (அட்லஸ், சீரதுன் நபி (ஸல்) பக்கம்-68)

ஹஸ்ரத் அலாஃ பின் ஹழ்ரமி (ரலி) அவர்களின் அறிமுகம் இதுவாகும். அதாவது, அன்னார் (ரலி) அவர்களின் பெயர் அலாஃ ஆகும். அன்னார் (ரலி) அவர்களின் தந்தையின் பெயர் அப்துல்லாஹ் ஆகும். அன்னார் (ரலி) அவர்கள் ஏமனின் பகுதியான ஹழ்ர் மவ்த் எனும் இடத்தைச் சேர்ந்தவராக இருந்தார்கள். இஸ்லாமிய அழைப்பின் துவக்கத்தில் அன்னார் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டுவிட்டார்கள். ஹஸ்ரத் அலாஃ பின் ஹழ்ரமி (ரலி) அவர்களின் ஒரு சகோதரரான அம்ர் பின் ஹழ்ரமி ஒரு முஸ்லிமால் கொல்லப்பட்ட இணைவைப்பவர்களில் முதல் நபராக இருந்தான். ஐந்தில் ஒரு பங்காக இஸ்லாத்திற்கு வந்த முதல் செல்வம் அவனுடைய செல்வமாக இருந்தது.

பத்ர் போரின் அடிப்படையான மற்றும் உடனடி காரணிகளும் எடுத்துரைக்கப்படுகின்றன. அதாவது, அவனுடைய கொலையும் ஒரு காரணமாக இருந்தது. ஹஸ்ரத் அலாஃ பின் ஹழ்ரமி (ரலி) அவர்களின் சகோதரரான ஆமிர் பின் ஹழ்ரமி பத்ர் யுத்தத்தில் நிராகரிப்பின் நிலையில் கொல்லப்பட்டான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அரசர்களுக்கு தப்லீக் கடிதங்கள் அனுப்பினார்கள். அப்போது, பஹ்ரைனின் ஆட்சியாளரான முன்ஸிர் பின் ஸாவா என்பவரிடம் கடிதத்தை எடுத்து செல்லும் தொண்டு ஹஸ்ரத் அலாஃ பின் ஹழ்ரமி (ரலி) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

அதன் பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அன்னார் (ரலி) அவர்களை பஹ்ரைனின் அதிகாரியாக நியமித்தார்கள்.

ஹஸ்ரத் அலாஃ பின் ஹழ்ரமி (ரலி) அவர்கள், அவருக்கு இஸ்லாத்திற்கான அழைப்பு விடுத்தபோது, முன்ஸிர் பின் சாவா இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டுவிட்டார். முன்ஸிருக்கு இஸ்லாத்தின் தூதுச் செய்தி கிடைத்தபோது, அவரது பதில் இவ்வாறாக இருந்தது. அதாவது, நான் இந்த விவகாரம் தொடர்பாக சிந்தித்து, ஆராய்ந்து பார்த்தேன். எனது கையில் உள்ளதை பார்த்தபோது, இது உலகத்திற்கானது, இது மறுமைக்கானது அல்ல என்பதை நான் கண்டுகொண்டேன். அதாவது, என்னிடம் உள்ளவையெல்லாம் உலகியல் விஷயங்களாகும். நான் மறுமைக்கான எந்த ஆயத்தமும் செய்யவில்லை. நான் உங்களது மார்க்கத்தை பற்றி சிந்தித்து சீர்தூக்கிப் பார்த்தபோது, அது உலகம், மறுமை இரண்டிற்கும் நன்மையானது என்பதை நான் கண்டுகொண்டேன். எனவே மார்க்கத்தை ஒப்புக் கொள்வதிலிருந்து என்னை எந்த விஷயமும் தடுக்க முடியாது.

இஸ்லாத்தின் உண்மையின் மீது எனக்கு உறுதி ஏற்பட்டுவிட்டது. இந்த மார்க்கத்தில் வாழ்க்கைக்கான ஆசையும், மரணத்தின் நிம்மதியும் உள்ளது. இதனை ஏற்றுக் கொண்ட மக்களைப் பற்றி நேற்று வரை எனக்கு வியப்பு இருந்தது. இன்று, இதனை நிராகரிக்கும் மக்கள் மீது எனக்கு ஆச்சரியம் ஏற்படுகிறது. போதனைகளின் அழகு எனக்கு தெரிந்துவிட்ட பிறகு எனது முன்னுரிமைகளும் மாறிவிட்டன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)அவர்களால் கொண்டு வரப்பட்ட ஷரீஅத்தின் மீதான மகத்துவத்தின் எதிர்பார்ப்பு என்னவென்றால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு மகத்துவமும், கண்ணியமும் வழங்கப்பட வேண்டும்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மரணம் வரை ஹஸ்ரத் அலாஃ பின் ஹழ்ரமி (ரலி) அவர்கள் பஹ்ரைனின் அதிகாரியாக இருந்தார்கள். அதன் பிறகு, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்திலும் அதே பதவியில் அன்னார் நிலைபெற்றிருந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் தமது கிலாஃபத்தில் அன்னாரை அதே பொறுப்பில் நியமித்தார்கள். எந்த அளவுக்கு என்றால்,

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில் அன்னார் (ரலி) மரணமடைந்துவிட்டார்கள். (அஸதுல் காபா தொகுதி 4, பக்கம் 71, பதிப்பு தாருல் குதுபில் இல்மியா 2016)

தப்காதே இப்னு அஸதின்படி, ஒரு முறை பஹ்ரைன் வாசிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னிலையில் ஹஸ்ரத் அலாஃ பின் ஹழ்ரமி (ரலி) அவர்களைப் பற்றி புகார் செய்தார்கள். அப்போது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அன்னாரை பதவி நீக்கம் செய்தார்கள். மேலும், ஹஸ்ரத் அபான் பின் ஸயீத் பின் ஆஸ் (ரலி) அவர்களை ஆளுநராக்கினார்கள். (தப்காதே இப்னு சஅத் தொகுதி 4-பக்கம் 266, பதிப்பு தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 1990)

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு அங்கு மார்க்கப் புறக்கணிப்பும், கிளர்ச்சியும் பரவிவிட்டது. அப்போது, ஹஸ்ரத் அபான் (ரலி) அவர்கள் மதீனாவிற்கு திரும்பி வந்துவிட்டார்கள். மேலும், அந்த பதவியிலிருந்து விலகிவிட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னாரை மீண்டும் பஹ்ரைனிற்கு அனுப்ப விரும்பியபோது, நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு எவருடைய ஊழியராகவும் இருக்க மாட்டேன் என்று கூறி வருத்தம் தெரிவித்துவிட்டார்கள். அப்போது, பின்னர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் அலாஃ பின் ஹழ்ரமி (ரலி) அவர்களை பஹ்ரைனின் அதிகாரியாக நியமித்து அனுப்பினார்கள். அந்த பொறுப்பில் அன்னார் (ரலி) தமது மரணம் வரை நிலைபெற்றிருந்தார்கள்.

ஹஸ்ரத் அலாஃ (ரலி) அவர்கள் துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுதல் விவகாரத்தில் பிரபல்யமாக இருந்தார்கள். அன்னாரைக் குறித்து பல்வேறு அறிவுப்புகள் வருகின்றன. அன்னாரின் சிறப்புகள் மற்றும் துஆ ஒப்புக் கொள்ளப்படுதல் விவகாரத்தில், நான் அன்னாரின் தாக்கத்திற்கு மிகவும் ஆளாகியுள்ளேன் என்று ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள்கூறிவந்தார்கள்: அன்னார் அறிவிக்கின்றார்கள்: ஏராளமான விஷயங்களில் இதுவும் ஒன்றாகும். அதாவது, ஒருமுறை மதீனாவிலிருந்து பஹ்ரைன் செல்லும் எண்ணத்துடன் புறப்பட்டார்கள். அப்போது வழியில்

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

தண்ணீர் தீர்ந்துவிட்டது. அன்னார் (ரலி) அவர்கள் அல்லாஹ்விடம் துஆ செய்தார்கள். மணலுக்கு கீழ் இருந்து ஒரு நீரூற்று பெருக்கெடுத்து விட்டது. மேலும், நாங்கள் அனைவரும் தாகத்தை தணித்துக் கொண்டோம்.

பின்னர், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நாங்கள் அலாஃவுடன் பஹ்ரைனிலிருந்து, படையுடன் பஸராவை நோக்கி புறப்பட்டோம். நாங்கள் லியாஸ் எனும் இடத்தில் இருந்தபோது அன்னாரின் மரணம் நிகழ்ந்துவிட்டது. லியாஸ் என்பது, பனூ தமீம் கோத்திரத்தின் பகுதியைச் சேர்ந்த ஒரு கிராமத்தின் பெயராகும். நாங்கள் தண்ணீர் இல்லாத ஓர் இடத்தில் இருந்தோம். அல்லாஹ் எங்களுக்காக மேகத்தின் ஒரு துண்டை வெளிப்படுத்தினான். அது எங்கள் மீது மழை பொழிந்தது. நாங்கள் அவரை நீராட்டினோம். மேலும் எங்களது வாள்களால் அன்னாருக்கு கப்ரை வெட்டினோம். நாங்கள் அன்னாருக்கு லஹது எனும் வகை கப்ரை தோண்டவில்லை. அப்போது நாங்கள் திரும்பி வந்துவிட்டோம். சில காலம் கழித்து நாங்கள் திரும்பிச் சென்று பார்த்தபோது, லஹது கட்டப்பட்டிருந்தது. ஆனால், அன்னாரின் கப்ரின் இடம் கிடைக்கவில்லை. (தப்காதே இப்னு அஸது மொழிபெயர்ப்பு நூல் தொகுதி 4, பக்கம் 375-377, நஃபீஸ் அகடாமி கராச்சி)

அன்னார் (ரலி) அவர்களின் மரணம் குறித்தும் கருத்துவேறுபாடு உள்ளது. சிலர், அன்னார் (ரலி) அவர்களின் மரணம் ஹிஜ்ரி 14ஆம் ஆண்டு நிகழ்ந்தது என்றும், சிலர் ஹிஜ்ரி 21 ஆம் ஆண்டு என்றும் கூறுகின்றனர். (அஸதுல் காபா தொகுதி-4, பக்கம்-71, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்)

பஹ்ரைனின் நிலைமைகள் தொடர்பாக குறிப்பு வருகின்றது. அதாவது, பஹ்ரைன் ஹீரா நாட்டின் அரசர்களின் நிர்வாகத்தின் கீழ் இருந்தது. ஹீராவின் அரசர்கள் கிஸ்ரா பேரரசர்களின் கீழ் இருந்தனர். இஸ்லாத்திற்கு முன்னர் ஹீரா ஈராக்கிய மன்னர்களின் அரசவையாக இருந்தது. பஹ்ரைனின் கடற்புற மற்றும் வணிக நகரங்களில் மக்கள் கலந்து வசித்து வந்தனர். பாரசீகர்களும் இருந்தனர். கிறித்தவர்களும் இருந்தனர். யூதர்களும் இருந்தனர். ஜாட்களும் இருந்தனர். அரேபியர்களின் வணிகத்தில் பாரசீகர்கள் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். இந்தியா மற்றும் ஈரானிலிருந்து வந்திருந்த

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

வியாபாரிகளின் ஒரு கூட்டத்தினர் அந்தப் பகுதிகளில் தங்கியிருந்தனர். யூப்ரடீஸ் நதிக்கரையிலிருந்து ஏடனின் கடற்கரை வரையிலான இடைப்பட்ட பிராந்தியத்தில் அவர்கள் குடியேறிவிட்டனர். அந்த வியாபாரிகள் உள்ளூர் வாசிகளுடன் திருமண பந்த தொடர்புகளையும் ஏற்படுத்திக் கொண்டார்கள். அவர்கள் மூலம் உருவாகும் சந்ததிகள் அப்னாஃ என்ற பெயரால் அழைக்கப்பட்டு வந்தனர்.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்களின் உருது மொழியாக்க நூல்- ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள், பக்கம்-237)

கடற்கரை நகரங்களுக்குப் பின்னால் மூன்று பெரிய கோத்திரங்களும்,அவர்களின் ஏராளமான கிளைகோத்திரத்தாரும் குடியேறினர். ஒன்று, பக்ர் பின் வாயில், இரண்டு அப்துல்கைஸ், மூன்று ரபீய்ஆஃ. அவர்களின் ஏராளமான குடும்பத்தினர் கிறித்தவர்களாக இருந்தனர். குதிரைகள், ஒட்டகங்கள் மற்றும் ஆடுகளை மேய்ப்பதும் பேரீத்தம் பழ தோட்டங்களை உருவாக்குவதும் அவர்களின் சிறப்பான தொழிலாக இருந்தது. அந்த கோத்திரங்களின் விவகாரங்களை நிர்வகிப்பவர் உள்ளூர் தலைவராக இருந்து வந்தார். அவர் ஹீரா அரசாங்கத்தின் நம்பிக்கையை பெற்றவராக இருந்தார். அவர்களில் ஒருவராக முன்ஸிர் பின் ஸாவா இருந்தார். அவர் பஹ்ரைனின் ஹஜர் மாவட்டத்தில் வசித்து வந்தார். ஹஜர் என்ற பகுதியின் அக்கம் பக்கத்திலிருந்த அப்துல் கைஸ் கோத்திரத்தில் அவரது அரசாங்கமே இருந்தது. (ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் அரசாங்க கடிதங்கள், பக்கம் 48-அல் முஸஃப்ஃபைன் டில்லி)

அப்துல் கைஸ் கோத்திரத்தின் இரண்டு குழுக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தனர்.ஒரு குழு ஹிஜ்ரி ஐந்தாம் ஆண்டு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் வந்தது. அதில் பதிமூன்று அல்லது பதினாங்கு நபர்கள் இருந்தனர். அப்துல் கைஸ் கோத்திரத்தின் இரண்டாவது குழு ஆமுல் வஃபூத் ஆண்டில் அதாவது, ஹிஜ்ரி ஒன்பதாம் ஆண்டில் மீண்டும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் வந்தனர். அதில் ஜாரூத் உட்பட நாற்பது நபர்கள் இருந்தனர்.ஜாரூத் கிறித்தவராக இருந்தார். அவர் அங்கு வந்து முஸ்லிம் ஆகிவிட்டார். (அட்லஸ் சீரத்துன் நபி (ஸல்) பக்கம், 438)

ஓர் அறிவிப்பின்படி, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் அந்தக் குழு வருவதற்கு முன்னரே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தது. (ஸர்கானி தொகுதி 5, பக்கம்-141, பதிப்பு தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 1996)

முன்ஸிர் பின் சாவா இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட பிறகு, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவரை தொடர்ந்து பஹ்ரைனின் ஆட்சியாளராக நியமனம் செய்திருந்தார்கள். இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட பிறகு, அவர் தமது சமுதாயத்திற்கும் உண்மையான மார்க்கமான இஸ்லாத்தின் பக்கம் வருவதற்கு, அழைப்பு கொடுக்க துவங்கிவிட்டார். மார்க்கப் பயிற்சி பெற்றுக் கொள்வதற்காக, ஜாரூத் பின் முஅல்லாவை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் அனுப்பி வைத்தார். ஜாரூத் மதீனா சென்றடைந்து இஸ்லாமிய போதனைகள் மற்றும் கட்டளைகளை குறித்து அறிந்து கொண்டார். மேலும், தமது சமுதாயத்திடம் திரும்பி சென்று மக்களுக்கு மார்க்க பிரச்சாரம் செய்து இஸ்லாமிய போதனைகளை கற்றுக் கொடுக்கும் பணிகளை துவங்கிவிட்டார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மரணமடைந்த சில நாட்களுக்குப் பிறகு, அதாவது ஹிஜ்ரி 11ஆம் ஆண்டில் முன்ஸிர் மரணமடைந்துவிட்டார். அப்போது அரேபியர்களும், அரேபியர்கள் அல்லாத மக்களும் கிளர்ச்சிக்கான அறிவிப்பை செய்துவிட்டனர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நபியாக இருந்திருந்தால், பின்னர் அன்னார் (ஸல்) அவர்கள் ஒருபோதும் மரணித்திருக்க மாட்டார்கள் என்று அப்துல் கைஸ் கோத்திரத்தினர் கூறினர். மேலும் அனைவரும் முர்தத் ஆகிவிட்டனர். அதன் தகவல் ஹஸ்ரத் ஜாரூத் (ரலி) அவர்களுக்கு கிடைத்தது. ஹஸ்ரத் ஜாரூத் (ரலி) அவர்கள் தமது சமுதாயத்தின் கண்ணியமான நபர்களைச் சேர்ந்தவராகவும்,தர்பிய்யத் பெறுவதற்காக மதீனாவிற்கு சென்றிருந்த நபராகவும் திகழ்ந்தார்கள். மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் ஹிஜ்ரத் செய்து சென்ற மக்களைச் சேர்ந்தவராகவும், ஒரு நல்ல சொற்பாழிவாளராகவும் அன்னார் (ரலி) அவர்கள் திகழ்ந்தார்கள்.

(அல்பதாயா வன் நஹாயா தொகுதி 2, பக்கம் 475, பதிப்பு தாரே ஹிஜ்ர்)

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மரணம் ஏன் நிகழ்ந்தது? என்ற விஷயத்தை கூறுவதற்காக ஹஸ்ரத் ஜாரூத் (ரலி) அவர்கள் முர்தத் ஆன அந்த மக்கள் அனைவரையும் ஒன்றுகூட்டினார்கள். மேலும், சொற்பொழிவாற்றுவதற்காக எழுந்து நின்று கூறினார்கள்: அப்துல் கைஸ் கூட்டத்தினரே! நான் உங்களிடம் ஒன்று கேட்கிறேன். நீங்கள் அதனை அறிந்திருந்தால் எனக்கு கூறுங்கள். நீங்கள் அதனை அறியாவிட்டால் கூறவேண்டாம். அதற்கு, நீங்கள் விரும்பியதை கேளுங்கள் என்று அன்னார் (ரலி) கூறினார்கள்.

அப்போது, ஹஸ்ரத் ஜாரூத் (ரலி) அவர்கள் கூறினார்கள்: கடந்த காலங்களில் நபிமார்கள் வந்துள்ளார்கள் என்பதை நீங்கள் அறிவீர்களா? ஆம் என்று மக்கள் கூறினர். நீங்கள் அவர்களை அறிவீர்களா? அல்லது அவர்களை நீங்கள் பார்த்துள்ளீர்களா? என்று ஹஸ்ரத் ஜாரூத் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு, நாங்கள் பார்க்கவில்லை எனினும் நாங்கள் அவர்களை அறிவோம் என்று அந்த மக்கள் கூறினர். இது அந்த மக்களின் பதிலாக இருந்தது. பின்னர் அவர்களுக்கு என்ன நேர்ந்தது? என்று ஹஸ்ரத் ஜாரூத் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அவர்கள் மரணித்துவிட்டனர் என்று மக்கள் கூறினர். அப்போது ஹஸ்ரத் ஜாரூத் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அவர்கள் அனைவரும் மரணித்தது போன்று ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களும் மரணித்துவிட்டார்கள். நான் அறிவிக்கின்றேன்

لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை. நிச்சயமாக, முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாரும், அவனது தூதரும் ஆவார்கள்.

அன்னாரின் சமுதாயம் அன்னாரின் சொற்பொழிவையும், கேள்வி பதிலையும் கேட்ட பிறகு இவ்வாறு கூறியது: அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை. நிச்சயமாக, முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாரும், அவனது தூதரும் ஆவார்கள் என்று நாங்களும் சாட்சி கூறுகின்றோம். நாங்கள் உம்மை எங்களது தேர்ந்தெடுக்கப்பட்டவராகவும், எங்களது தலைவராகவும் உம்மை ஒப்புக் கொள்கிறோம். இவ்வாறு அந்த மக்கள் இஸ்லாத்தில் நிலைத்திருந்தனர். மேலும், மார்க்கப் புறக்கணிப்பு எனும் தொற்று அவர்களை சென்றடையவில்லை. (தாரீகே தபரி, தொகுதி 2 பக்கம் 285, பதிப்பு தாருல் குதுபில் இல்மியா லெப்னான் 2012)

ஏனைய அரேபியர் மற்றும் அரேபியர் அல்லாத சமுதாயங்கள் மதீனாவின் அரசாங்கத்தை அழிப்பதற்கு முழு மூச்சாக செயல்பட்டனர். ஈரானிய அரசாங்கம் அவர்களுக்கு ஆதரவு அளித்து வந்தது. மேலும், கிளர்ச்சிக்கான பொறுப்பை ஒரு பெரிய அரேபிய தலைவரிடம் ஒப்படைத்தது. ஹஜரில், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பிரதிநிதியான அபான் பின் ஆஸ் அவர்கள், கிளர்ச்சியின் கருமேகங்கள் சூழ்வதை கண்ட பிறகு மதீனாவிற்கு திரும்பி வந்துவிட்டார்கள். (ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் அரசாங்க கடிதங்கள், பக்கம் 49. நித்வத்துன் முஸன்னிஃபீன். தில்லி)

வெளிப்படையில் அப்துல் கைஸ் கோத்திரத்தின் சில மக்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தபோதிலும், பஹ்ரைனின் ஏனைய கோத்திரங்கள் ஹுதம் பின் லுபைஅஃவின் தலைமையின் கீழ் தொடர்ந்து மார்க்கப் புறக்கணிப்பில்

நிலைத்திருந்தனர். அவர்கள் மீண்டும் அரசாட்சியை முன்ஸிர் சந்ததியினரிடம் மாற்றிவிட்டு முன்ஸிர் பின் நுஃமானை தமது அரசராக ஆக்கிக் கொண்டனர். ஓர் அறிவிப்பில் வருகிறது.

அவர்கள் முன்ஸிர் பின் நுஃமானை அரசராக்க எண்ணம் கொண்டபோது, அவர்களின் கண்ணியமிக்கவர்கள் மற்றும் தலைவர்களை கொண்ட குழுவினர் ஈரானிய மன்னர் கிஸ்ராவிடம் சென்றனர். மன்னரின் அவையில் நேரடியாக சந்திக்க அனுமதி வேண்டினர். அவர் அவர்களுக்கு அனுமதி வழங்கிவிட்டார். மேலும், மன்னரின் அருமை பெருமைகளை வெளிப்படுத்தியவாறு மன்னருக்கு முன்னால் அந்த மக்கள் ஆஜரானார்கள். கிஸ்ரா கூறினார்: அரேபிய கூட்டத்தினரே! உங்களை எந்த விஷயம் இங்கு அழைத்து வந்துள்ளது? அதற்கு, மன்னரே! குரைஷியர்களும், எகிப்தின் அனைத்து கோத்திரங்களும் மிகவும் கண்ணியமிக்கவராக கருதிவந்த அரேபியாவின் அந்த மனிதர் மரணித்துவிட்டார்.

அவர்கள் கூறியதன் பொருள் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் ஆவார்கள்.

தொடர்ந்து அவர்கள் கூறினர்: அவருக்குப் பிறகு,மிகவும் பலவீனமான உடலைக் கொண்ட, பலவீனமான அறிவு படைத்த நபர் ஒருவர் அவரது பிரதிநிதியாக வந்துள்ளார்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைக் குறித்து இந்தக் கருத்தை அவர்கள் கூறினர்.

அவரது அதிகாரி தமது தோழரிடமிருந்து வழிகாட்டல் பெறுவதற்காக திரும்பி சென்றுவிட்டார். அப்துல் கைஸ் கோத்திரத்தின் சிறிய கூட்டத்தினரைத் தவிர, தற்போது வேறு எவரும் இஸ்லாத்தில் நிலைத்திருக்கவில்லை. இன்று, பஹ்ரைனின் பகுதி அவர்களின் கையிலிருந்து சென்றுவிட்டது. எங்களை பொறுத்தவரை அவர்களுக்கு எந்த மதிப்பும் இல்லை. அவர்களின் காலாப் படை,மற்றும் குதிரைப் படைகளின் மீது எங்களுக்கு பெரும்பான்மை உள்ளது. பஹ்ரைனை கைப்பற்ற விரும்பக் கூடிய ஒருவரை எங்களுடன் அனுப்புங்கள். அவர் எவராலும் தடுத்து நிறுத்த முடியாதவராக இருக்க வேண்டும். நான் உங்களுடன் பஹ்ரைனிற்கு அனுப்ப வேண்டும் என்று நீங்கள் யாரை விரும்புகின்றீர்கள்? என்று கிஸ்ரா கேட்டார். அதற்கு, மன்னர் யாரை விரும்புகின்றீர்களோ அவரை அனுப்புங்கள் என்று அவர்கள் கூறினர். முன்ஸிர் பின் நுஃமான் பின் முன்ஸீரைக் குறித்து நீங்கள் என்ன கூறுகின்றீர்கள்? என்று கிஸ்ரா கேட்டார். அதற்கு, அரசரே! நாங்கள் அவரையே விரும்புகிறோம். அவரைத் தவிர வேறு எவரையும் விரும்பவில்லை என்று அவர்கள் கூறினர். பின்னர் கிஸ்ரா, முன்ஸிர் பின் நுஃமானை அழைத்தார். அவருக்கு அப்போதுதான் புத்தம் புதிதாக தாடி முளைத்திருந்தது. அரசர் அவருக்கு கீரிடம் அணிவித்தார். மேலும் நூறு குதிரை சவாரிகளை வழங்கினார். மேலும் ஏழாயிரம் காலாப் படை மற்றும் குதிரைப் படையை வழங்கினார். பக்ர் பின் வாயில் கோத்திரத்துடன் பஹ்ரைன் செல்வதற்கு மன்னர் அவனுக்கு கட்டளை வழங்கினார். அவனுடன், அபூ லுபைஅஃ ஹூதம் பின் ஸைது இருந்தான். அவனது முழுப் பெயர் ஷுரைஹ் பின் லுபைஅஃ ஆகும். அவன் பனூ கைஸ் பின் ஸஃலபா கோத்திரத்தைச் சேர்ந்தவனாக இருந்தான். ஹூதம் அவனது சுட்டுப் பெயராக இருந்தது. அவன் இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட பிறகு, பின்னர் மார்க்கப் புறக்கணிப்பை மேற்கொண்டு விட்டான். (கிதாபுர் ரத்தா லில் வாகிதி பக்கம் 147-149, தாருல் கர்புல் இஸ்லாமியா 1990)

முதன் முதலில் அவர்கள், ஜாரூத் (ரலி) மற்றும் அப்துல் கைஸ் கோத்திரத்தை இஸ்லாத்திலிருந்து விலக்குவதற்கு முயற்சி செய்தனர். ஆனால், அவர்கள் தோல்வியைத் தழுவினர். அப்போது, ஹூதம் பின் லுபைஅஃ பலவந்தமாக தனக்கு கீழ் கொண்டு வர விரும்பினான். கதீஃப் மற்றும் ஹஜரில் தங்கியிருந்த அந்நிய நாட்டின் வியாபாரிகளையும், அதுவரை இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளாத மக்களை அவன் தன்னுடன் இணைத்துக் கொண்டான். (முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்களின் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) எனும் நூல், பக்கம் 238-239, இஸ்லாமிய குதாப் கானா)

அப்துல் கைஸ் கோத்திரத்தின் மக்கள் தமது தலைவர் ஹஸ்ரத் ஜாரூத் பின் முஅல்லி (ரலி) அவர்களுடன் தமது நான்காயிரம் தோழர்கள் மற்றும் தமது அடிமைகளுடன் ஒன்று கூடினார்கள்.

பக்ர் பின் அவாயில் கோத்திரம் தமது ஒன்பதாயிரம் ஈரானியர்களுடனும், மூன்றாயிரம் அரேபியர்களுடன் அவர்களுக்கு அருகில் சென்றனர். பின்னர் இருதரப்பிற்கும் மத்தியில் கடுமையான போர் நிகழ்ந்தது. மேலும், பக்ர் பின் அவாயில் கோத்திரத்திற்கு கடுமையான பாதிப்பை சந்திக்க நேரிட்டது. அவர்களை சார்ந்தவர்களிலும், ஈரானியர்களைச் சார்ந்தவர்களிலும் ஏராளமான நபர்கள் கொலை செய்யப்பட்டனர். பின்னர் இரண்டாவது முறை கடுமையாக சண்டையிட்டனர். இந்த முறை அப்துல் கைஸ் கோத்திரத்திற்கு பெரும் நஷ்டத்தை சந்திக்க நேரிட்டது. இதேபோன்று, அவர்கள் ஒருவர் மற்றவரை பழிவாங்கிக் கொண்டிருந்தனர். அவர்களுக்கிடையில் பல நாட்கள் வரை போர் நீடித்து வந்தது. எந்த அளவுக்கு என்றால் ஏராளமான மக்கள் கொலை செய்யப்பட்டனர். மேலும், அப்துல் கைஸ் கோத்திரத்தின் பொது மக்கள் பக்ர் பின் அவாயில் கோத்திரத்திடம் பாதுகாப்பிற்கான கோரிக்கை வைத்தார்கள். தற்போது, பக்ர் பின் அவாயிலுக்கு எதிராக போரிட தங்களுக்கு எந்த ஆற்றலும் இல்லை என்பதை அப்துல் கைஸ் அப்போது அறிந்து கொண்டனர். எனவே அவர்கள் தோல்வியுற்றனர். எந்த அளவிற்கு என்றால், அவர்கள் ஹஜர் பூமியில் அமைந்திருந்த ஜுவாஸா எனும் பெயர் கொண்ட தமது கோட்டைக்குள் சென்றுவிட்டனர். ஜுவாஸா என்பது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பள்ளிவாயிலிற்குப் பிறகு, முதன் முதலில் ஜுமுஆ தொழ வைக்கப்பட்ட பஹ்ரைனின் ஊராகும்.

ஆக, புகாரியில் ஓர் அறிவிப்பு வருகின்றது. ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அதனை அறிவிக்கின்றார்கள்:

إِنَّ أَوَّلَ جُمُعَةٍ جُمِّعَتْ بَعْدَ جُمُعَةٍ فِيْ مَسْجِدِ رَسُوْلِ اللهِ
فِيْ مَسْجِدِ عَبْدِ الْقَيْسِ بِجُوَاثٰى مِنَ الْبَحْرَيْنِ

பொருள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பள்ளிவாயிலுக்குப் பிறகு, முதன் முதலில் ஜுமுஆ தொழுகை அப்துல் கைஸ் கோத்திரத்தின் பள்ளிவாயிலில் பஹ்ரைனில் ஜுவாஸா எனும் ஊரில் நடந்தது.

பனூ பக்ர் பின் அவாயில் தமது ஈரானிய மக்களுடன் முன்னேறிச் சென்றனர். அவர்களின் கோட்டை வரை சென்றடைந்தனர். மேலும், அவர்களை சுற்றிவளைத்துவிட்டார்கள். அவர்களின் உணவை தடுத்து நிறுத்தினர். பனூ பக்ர் பின் கிலாப் கோத்திரத்தைச் சேர்ந்த அப்துல்லாஹ் பின் அவ்ஃப் என்ற நபர் (அவரது பெயர் அப்துல்லாஹ் பின் ஹஸஃப் என்றும் வருகிறது) அந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் மதீனா வாசிகளை விளித்தவாறு, சில கவிதைகளை எழுதினார். அவற்றில் தமது இயலாமை, பலவீனம், தைரியம் மற்றும் பொறுமையின் நிலையை வெளிப்படுத்தினார்.

அது சற்று பெரிய கவிதையாகும். எவ்வாறு இருப்பினும், அதன் பொருள் இவ்வாறாகும்.

கேட்பவர்களே! அபூபக்ர் (ரலி) மற்றும் மதீனாவின் அனைத்து இளைஞர்களுக்கும் தூதுச் செய்தியை எட்ட வைத்துவிடுங்கள். ஜுவாஸாவில் இளைஞர்கள் பட்டினியிலும், முற்றுகையின் நிலையிலும் இரவை கழித்தனர். அவர்களுக்காக உங்கள் புறமிருந்து எனக்கு உதவி கிடைக்குமா? எல்லா வழிப்

பாதைகளிலும் அவர்களின் இரத்தம் எவ்வாறு படிந்துள்ளது என்றால், அது சூரியக் கதிர்களைப் போன்று காண்பவர்களின் கண்களை கூச செய்கிறது. பனூ ஸூஹல், இஜ்ல், ஷய்பான் மற்றும் கைஸ் கோத்திரங்கள் அநீதியிழைத்தவாறு அவர்கள் அனைவரையும் முற்றுகையிட்டுள்ளார்கள்.

அநியாயமாக எங்களது மனைவிகளையும், பிள்ளைகளையும் பறித்துக் கொள்வதற்காக அவர்களின் தலைமை ஆணவம் கொள்கின்றது. (ஆணவத்தின் அசல் பெயர் முன்ஸிர் பின் நுஃமான் பின் முன்ஸிர் ஆக இருந்தது). அவர்களின் முற்றுகை கடுமையாகிக் கொண்டும், நீண்டுக் கொண்டும் சென்றபோது, அவர்கள் எங்களை வெற்றிக் கொண்டு விட்டார்கள். அதனால் நாங்கள் சோதனைக்கு ஆளாக்கப்பட்டோம். நாங்கள் ரஹ்மானாகிய இறைவனின் மீது தவக்குல் வைத்தோம். ஏனென்றால் அவனது அருள் அவன் மீது தவக்குல் வைத்தவர்களுக்கு கிடைத்ததை பார்த்துள்ளோம். எனவே நாங்கள் கூறினோம். அல்லாஹ் எங்களது இறைவன் என்பதிலும், இஸ்லாம் எங்களது மார்க்கம் என்பதிலும் நாங்கள் திருப்தி கொண்டுள்ளோம். மேலும் நாங்கள் கூறினோம். விவகாரங்கள் தீர்க்கப்பட்டுவிடும். எங்களது முன்னோர்களின் சந்ததிகளின் அறிவு செயல் இழந்துவிட்டது. நாங்கள் இஸ்லாத்தில் நிலைத்து இருந்தவாறு உங்களுடன் போர் புரிந்து வருவோம். எதுவரை என்றால், ஒன்று நீங்கள் கொல்லப்படுவீர்கள் அல்லது நாங்கள் கொல்லப்படுவோம். கூர்மையான முனைகளைக் கொண்ட, கவசங்களை வெட்டக் கூடிய கூர்மையான வாள்களைக் கொண்டு நாங்கள் போர் புரிவோம்.

ஆக, இந்த தூதுச் செய்தியை கவிதையின் வடிவில் அபதி அனுப்பியிருந்தார்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இந்தக் கவிதையை படித்த போது, அப்துல் கைஸின் நிலைமையை அறிந்து அன்னார் (ரலி) அவர்களுக்கு கடுமையான துன்பம் ஏற்பட்டது.

அன்னார் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அலாஃ பின் ஹழ்ரமி (ரலி) அவர்களை அழைத்தார்கள். படையின் தலைமை பொறுப்பை அவரிடம் ஒப்படைத்தார்கள். இரண்டாயிரம் முஹாஜிர் மற்றும் அன்சார் சகோதரர்களுடன் பஹ்ரைனை நோக்கி அப்துல் கைஸின் உதவிக்காக புறப்படும்படி அன்னாருக்கு கட்டளையிட்டார்கள். மேலும், அரேபிய கோத்திரங்களில் நீங்கள் எந்த கோத்திரத்தை கடந்து சென்றாலும் அவர்களுக்கு பனூ பக்ர் பின் அவாயிலுக்கு எதிராக போரிட கவனமூட்டவும். ஏனென்றால், அவர்கள் ஈரானிய அரசர் கிஸ்ராவால் நியமிக்கப்பட் முன்ஸிர் பின் நுஃமான் பின் முன்ஸிருடன் வந்துள்ளனர். அவர் அதாவது, அந்த அரசர் அவரது தலையில் கீரிடம் அணிவித்துள்ளார். மேலும், அல்லாஹ்வின் ஒளியை அழிப்பதற்கு எண்ணம் கொண்டுள்ளார். மேலும், அல்லாஹ்வின் நேசர்களை கொன்றுள்ளனர். எனவே நீங்கள்

لَاحَوْلَ وَلَا قُوَّةَ إِلَّا بِاللّٰهِ

ஓதியவாறு புறப்படுங்கள். பொருள்: அல்லாஹ் ஆற்றல் வழங்காத வரை பாவங்களிலிருந்து தப்பிப்பதற்கும், நன்மை செய்வதற்கும் ஆற்றல் எங்களுக்கு இல்லை. (கிதாபுர் ரத்தா லில் வாகிதீ பக்கம் 152-154, தாருல் கர்புல் இஸ்லாமியா 1990)

ஹஸ்ரத் அலாஃ பின் ஹழ்ரமி (ரலி) அவர்கள் புறப்பட்டுவிட்டார்கள். அன்னார் (ரலி) அவர்கள் யமாமாவைக் கடந்து சென்றபோது, ஹஸ்ரத் ஸூமாமஃ பின் உஸால் (ரலி) அவர்களின் பனூ ஹனீஃபாவின் ஒரு கூட்டத்தினர் அன்னாருடன் இணைந்து கொண்டனர். ஹஸ்ரத் உஸால் அன்னாரை வந்து சந்தித்தார்கள். அன்னார் மட்டுமின்றி, கைஸ் பின் ஆஸிம் அவர்களும் தமது கோத்திரம் பனூதமீம் மக்களுடன் ஹஸ்ரத் அலாஃ பின் ஹழ்ரமி (ரலி) அவர்களின் படையில் வந்து இணைந்து கொண்டார்கள். அதற்கு முன், கைஸ் பின் ஆஸிம் பனூ ஸகாத் கொடுக்க மறுத்தவர்களுடன் இருந்தார்கள். கோத்திரத்தின் ஸகாத் மதீனாவிற்கு அனுப்புவதை முற்றிலும் அன்னார் நிறுத்திவிட்டார்கள். ஒன்றுதிரட்டப்பட்ட ஸகாத் செல்வம் அந்த மக்களுக்கு திரும்ப கொடுக்கப்பட்டது. ஆனால், ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் யமாமாவில் பனூ ஹனீஃபாவை தோற்கடித்தபோது கைஸ் பின் ஆஸிம் முஸ்லிம்களுக்கு முன்னால் சரணடைந்து விடுவதிலேயே பாதுகாப்பு இருக்கிறது என்பதை புரிந்து கொண்டார். மேலும் தமது கோத்திரம் பனூதமீமிடமிருந்து ஸகாத் செல்வங்களை ஒன்று திரட்டினார். மேலும், ஹஸ்ரத் அலாஃ பின் ஹழ்ரமி (ரலி) அவர்களின் படையில் இணைந்துவிட்டார். (முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்களின் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) எனும் நூல் பக்கம் 239, இஸ்லாமிய குதுப் கானா)

ஹஸ்ரத் அலாஃ (ரலி) அவர்களின் படை தஹ்னாவின் வழியாக பஹ்ரைனை நோக்கி சென்றது. அலாஃ (ரலி) அவர்கள் தமது படையை தஹ்னா வழியாக பஹ்ரைனை நோக்கி அழைத்துச் சென்றார்கள். தஹ்னா: பனூ தமீமின் ஊர்களில் பஸராவிலிருந்து மக்காவிற்கு செல்லும் வழியில் உள்ள ஓர் இடமாகும். அன்னார் கூறுகின்றார்கள்: நாங்கள் அதற்கு மத்தியில் சென்றடைந்தபோது அன்னார் முகாமிடுவதற்கு எங்களுக்கு கட்டளை வழங்கினார்கள். அறிவிப்பாளர் கூறுகின்றார்: இரவின் இருளில் ஒட்டகம் கட்டுப்பாட்டை இழந்து ஓடிவிட்டது. அவர்களில் யாரிடமும் ஒட்டகமும் இல்லை. சேணமும் இல்லை. கூடாரமும் இல்லை. பாலைவனத்தில் அனைத்தும் ஒட்டகத்துடன் தொலைந்துவிட்டது. அதாவது, ஒட்டகத்தின் மீது ஏற்றப்பட்டிருந்த அனைத்து சாமான்களும் தொலைந்துவிட்டன. ஒட்டகங்கள் சென்றுவிட்டதால் அவர்களிடம் எதுவுமே இல்லை. மக்கள் சவாரிகளிலிருந்து இறங்கியபோது இந்த சம்பவம் நிகழ்ந்தது. எனினும், அவர்களால் சாமான்களை ஒட்டகங்களிலிருந்து இறக்க முடியவில்லை. அப்போது அவர்கள் துக்கமும், துன்பமும் அடைந்தார்கள். அனைவரும் தாங்கள் உயிர்பிழைப்போம் என்ற நம்பிக்கையை இழந்து ஒருவர் மற்றவரிடம் உயில் எழுதத் தொடங்கினார்கள். இதற்கிடையில் ஹஸ்ரத் அலாஃ (ரலி) அவர்களின் அறிவிப்பாளர் அனைவருக்கும் ஒன்றுகூடுவதற்கு கட்டளையிட்டார். அனைவரும் அவருக்கு அருகில் ஒன்றுகூடினர். ஹஸ்ரத் அலாஃ (ரலி) அவர்கள் கூறினார்கள்: உங்களை நான் துன்பத்திலும், வேதனையிலும் காண்கின்றேனே. இது என்ன? நீங்கள் இந்த அளவிற்கு ஏன் கவலைப்படுகின்றீர்கள்? அதற்கு, எங்களை குற்றம் சுமத்துவதற்கு இது ஒன்றும் விஷயம் அல்லவே. எங்களது ஒட்டகங்கள் ஓடிவிட்டன. இதே நிலையில் பொழுது விடிந்தால் சூரியன் நன்றாக உதயமாவதற்கு முன் நாங்கள் அனைவரும் அழிந்துபோயிருப்போம். இதுவே எங்கள் நிலைமை என்று மக்கள் கூறினர்.

ஹஸ்ரத் அலாஃ (ரலி) அவர்கள் கூறினார்கள்: மக்களே! அஞ்ச வேண்டாம். நீங்கள் முஸ்லிம்கள் இல்லையா? நீங்கள் அல்லாஹ்வின் வழியில் ஜிஹாது செய்வதற்கு வரவில்லையா? நீங்கள் அல்லாஹ்வின் உதவியாளர்கள் இல்லையா? நிச்சயமாக ஆவோம் என்று அனைவரும் கூறினர். ஹஸ்ரத் அலாஃ (ரலி) அவர்கள் கூறினார்கள்: உங்களுக்கு நற்செய்தி உண்டாகட்டுமாக. ஏனென்றால், உங்களின் நிலைமையில் இருக்கும் மக்களை அல்லாஹ் ஒருபோதும் கைவிடுவதில்லை. ஃபஜ்ர் தொழுகைக்கான நேரம் வந்ததும் பாங்கு கொடுக்கப்பட்டது. ஹஸ்ரத் அலாஃ (ரலி) தொழுகை நடத்தினார்கள். சில மக்கள் தயம்மம் செய்து தொழுதார்கள். தண்ணீர் கிடைக்கவில்லை. சிலருக்கு இன்னும் பழைய வுளூ பாக்கியிருந்தது. தொழுகை முழுமையானவுடன் ஹஸ்ரத் அலாஃ (ரலி) அவர்கள் தமது இரண்டு முழுங்கால்களில் துஆவிற்காக அமர்ந்திருந்தார்கள். அனைவரும் அதேபோன்று, இரண்டு தொடைகளில் துஆவிற்காக அமர்ந்து

கொண்டனர். மேலும் உருக்கத்துடன் இரண்டு கைகளையும் உயர்த்தி துஆவில் ஈடுபட்டனர். மக்களும் அதேபோன்று செய்தனர். எந்த அளவுக்கு என்றால், சூரியன் உதயமாகிவிட்டது. சூரியனின் சிறிய அளவிலான ஒளி கிழக்கில் வெளிப்பட்டபோது ஹஸ்ரத் அலாஃ (ரலி) அவர்கள் ஸஃப்களின் பக்கம் கவனம் செலுத்தினார்கள். மேலும், இது என்ன ஒளி? என்று தகவல் அறிந்துவருவதற்கு யாரும் இருக்கின்றாரா? என்று அன்னார் (ரலி) கேட்டார்கள். அந்த பணிக்காக ஒருவர் சென்றார். இந்த ஒளி வெறும் கானல் நீராகும் என்று அவர் திரும்பி வந்து கூறினார். எங்கு வெளிச்சம் பட்டதோ அங்கு ஒளிவீசியது. அது தண்ணீர் அல்ல. மாறாக, கானல் நீராகும். ஹஸ்ரத் அலாஃ (ரலி) அவர்கள் மீண்டும் துஆவில் மும்முரமாகிவிட்டார்கள். இரண்டாவது முறையும் அந்த ஒளி தென்பட்டது. விசாரித்தபோது அது கானல் நீர் என்பது தெரிய வந்தது. மூன்றாவது முறையாகவும் மீண்டும் ஒளி வெளிப்பட்டது. இந்த முறை செய்தி கொண்டு வந்தவர் தண்ணீர் உள்ளது என்று கூறினார். ஹஸ்ரத் அலாஃ (ரலி) அவர்கள் எழுந்து நின்றார்கள். அனைவருமே எழுந்து நின்றுவிட்டனர். மேலும் தண்ணீருக்கு அருகில் சென்றனர். அனைவரும் தண்ணீர் அருந்தினர். மேலும் குளித்தனர். அங்கு ஒரு நீரூற்று பெருக்கெடுத்திருந்தது. தற்போது பொழுது விடிந்திருக்கவில்லை. மக்களின் ஒட்டகங்கள் எல்லாபுறமிருந்தும் ஓடியவாறு அவர்களிடம் வருவது தென்பட்டது. அவை அந்த மக்களுக்கு அருகில் வந்து அமர்ந்துவிட்டன. ஒவ்வொரு நபரும் தமது சவாரியை பிடித்துக் கொண்டார். அவர்களின் பொருட்களில் எந்த ஒரு பொருளும் வீணாகவில்லை. துஆவின் அற்புதம் அங்கு நிகழ்ந்தது.

அல்லாஹ் தண்ணீரையும் வெளிப்படச் செய்தான். ஒட்டகங்களும் திரும்பி வந்துவிட்டன. மக்கள் அவற்றிற்கும் தண்ணீர் கொடுத்தனர். பின்னர் இரண்டாவது முறையாக நன்கு திருப்தியடைந்து தண்ணீர் குடித்தனர். அந்த விலங்குகளையும் தண்ணீர் பருகச் செய்தனர். தம்முடன் பெருமளவில் தண்ணீரை எடுத்துச் சென்றனர். பின்னர் மிகவும் நன்றாக ஓய்வு எடுத்தனர்.

மின்ஜாப் பின் ராஷித் கூறுகின்றார்கள்: அந்த நேரத்தில் ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் என்னுடன் இருந்தார்கள். நாங்கள் அந்த இடத்திலிருந்து சற்று தொலைவில் வந்துவிட்டபோது அந்த தண்ணீரின் இடத்தை நீங்கள் அறிவீர்களா? என்று என்னிடம் கேட்டார்கள். அதற்கு, ஏனைய அனைத்து அரேபியர்களை விடவும் இந்தப் பகுதியின் மூலை முடுக்குகளை நன்கு அறிந்துள்ளேன் என்று நான் கூறினேன். அப்படியென்றால், சற்று என்னை நீங்கள் அந்த இடத்திற்கு அழைத்து செல்லுங்கள் என்று ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறினார்கள். நான் ஒட்டகத்தை திருப்பினேன். சரியாக அந்த தண்ணீர் இருக்கும் இடத்திற்கு அன்னாரை அழைத்து வந்தேன். அங்கு வந்து பார்த்தபோது, எந்த ஒரு நீரூற்றும் இல்லை. தண்ணீரின் எந்த அடையாளமும் இல்லை. அப்போது, நான் ஹஸ்ரத் அபூஹுரைராவிடம், இறைவன் மீது ஆணையாக! எனக்கு இங்கு எந்த நீரூற்றும் தென்படவில்லை தான். எனினும் நான் நிச்சயம் இதனையே கூறுவேன். அதாவது, நாங்கள் தண்ணீர் எடுத்த இடம் இதே இடம் தான். எனினும் அதற்கு முன் இந்த இடத்தில் தூய, இனிமையான தண்ணீரை பார்த்ததே இல்லை. ஆயினும் அந்தநேரத்திலும் தண்ணீரால் பாத்திரம் நிறைந்திருந்தது. ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறினார்கள்: அபூ ஸஹ்மே! இறைவன் மீது ஆணையாக! இதுவே அந்த இடம். எனவேதான் நான் இங்கு வந்துள்ளேன். மேலும் உம்மையும் அழைத்து வந்துள்ளேன். நான் எனது பாத்திரத்தை தண்ணீரால் நிறைத்தேன். மேலும், அதனை நீரூற்றின் ஓரத்தில் வைத்துவிட்டேன். நான் கூறினேன். ஒருவேளை இது அல்லாஹ்வின் அற்புதம் மற்றும் அவன்புறமிருந்து இறங்கிய ரஹ்மத் என்றால் அதனையும் நான் அறிந்து கொள்வேன். ஒருவேளை இது வெறும் மழை நீர் என்றால் அதனையும் நான் கண்டுபிடித்துவிடுவேன்.

பிறகு தெரியவந்தது. அதாவது, உண்மையிலேயே அல்லாஹ் எங்களை காப்பாற்றுவதற்காக வெளிப்படுத்திய அற்புதமாக அது இருந்தது. அப்போது, ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அல்லாஹ்வை புகழ்ந்தார்கள். அங்கிருந்து திரும்பி மீண்டும் நாங்கள் எங்களது பாதையில் சென்றோம். மேலும் ஹஜர் எனும் இடத்தில் வந்து முகாமிட்டோம். (தாரீகே தபரி தொகுதி 2, பக்கம் 286-188 பதிப்பு தாருல் குதுபில் இல்மியா லெப்னான் 2016)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் ஒரு கடிதம் எழுதினார்கள். அது இவ்வாறாகும்.

அம்மா பஃது, அல்லாஹ் நமக்காக தஹ்னா பள்ளத்தாக்கில் ஒரு நீரூற்றை பெருக்கெடுக்கச் செய்துள்ளான்.

அந்த சம்பவத்திற்குப் பிறகு, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு அந்த தகவல் கிடைத்தபோது அன்னார் (ரலி) அவர்கள் இந்தக் கடிதத்தை எழுதினார்கள். ஆனால், அதற்குமுன் அங்கு நீரூற்றின் எந்த அடையாளமும் இருக்கவில்லை. கடுமையான வேதனை மற்றும் துன்பத்திற்குப் பிறகு எங்களுக்கு தனது ஓர் அற்புதத்தை அல்லாஹ் காட்டினான். ஹஸ்ரத் அலாஃ (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு கடிதம் எழுதினார்கள். துன்பங்களுக்குப் பிறகு அல்லாஹ் தனது அற்புதத்தை எங்களுக்கு காட்டினான். அதில் நம் அனைவருக்கும் படிப்பினை உள்ளது. நாம் அவனை புகழ்ந்து அவனது தூய்மையை எடுத்துரைப்பதற்காக இது நிகழ்ந்ததாகும். எனவே அல்லாஹ்விடத்தில் துஆ வேண்டுங்கள். அவனது மார்க்கத்தின் உதவியாளர்களின் உதவியை கேளுங்கள். ஹஸ்ரத் அலாஃ (ரலி) அவர்கள் தண்ணீர் கிடைத்த பிறகு, சம்பவம் நிகழ்ந்த பிறகு, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு இந்த அறிக்கையை அனுப்பினார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அல்லாஹ்வை புகழ்ந்தார்கள். அவனிடம் துஆ செய்தார்கள்.

தஹ்னா பள்ளத்தாக்கு பற்றி அரேபியர்கள் எப்போதும் இந்த விஷயத்தை எடுத்துரைத்து வந்துள்ளனர். அதாவது, அந்த பள்ளத்தாக்கில் தண்ணீருக்காக தோண்டலாமா? வேண்டாமா? என ஹஸ்ரத் லுக்மான் (அலை) அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கு, அதனை தோண்டுவதற்கு தடைவிதித்துவிட்டார்கள். மேலும், ஒருபோதும் தண்ணீர் வராது என்று கூறினார்கள். இந்த காரணத்தால் அந்தப் பள்ளத்தாக்கில் நீரூற்று பெருக்கெடுத்தது என்பது அல்லாஹ்வின் வல்லமைக்கான ஒரு மாபெரும் அடையாளம் ஆகும். அதுபற்றிய நிலையை நாம் முன்னர் எந்த சமுதாயத்திலும் கேட்டதில்லை. (தாரீகுத் தபரி தொகுதி 2, பக்கம் 290 பதிப்பு தாருல் குதுபில் இல்மியா லெப்னான் 2012)

அல்லாஹ்விற்காக போரில் சென்றிருந்த சஹாபிகளுடன் இவ்வாறான அற்புதங்களும் இருந்து வந்துள்ளன. எவ்வாறு இருப்பினும், எஞ்சிய பகுதி இன்ஷாஅல்லாஹ் எதிர்வரும் காலத்தில் எடுத்துரைக்கப்படும்.

தமிழாக்கம் :

மவ்லவி A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

*****

## வருடாந்திர இஜ்திமாக்கள் 2022

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் மூஃமினீன் இந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதியா, மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ், மஜ்லிஸ் லஜ்னா இமாயில்லாஹ் ஆகிய கிளை அமைப்புகளுக்கான இஜ்திமாக்களை 21, 22, 23 அக்டோபர் 2022 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கு பரிவுகூர்ந்து ஒப்புதல் நல்கியுள்ளார்கள். ஜமாஅத் சகோதரர்கள் இதற்கேற்ப துஆக்கள் செய்தவாறு இந்த இஜ்திமாக்களில் பங்கு பெறுவதற்கு எல்லா முயற்சிகளையும் செய்யுங்கள்.

(சதர் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, பாரத்)

## ஜுமுஆ பேருரை

### ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபா ராஷித், சித்தீக்கே அக்பர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் சிறப்புகள் மற்றும் உயர் அந்தஸ்து

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாத்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 17 ஜூன் 2022,** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு இஹ்ஸான் மாதம் **17ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

சென்ற இதழின் தொடர்ச்சி.......

ஓமனிலும் இந்தக் குழப்பம் முடிவுக்கு வந்துவிட்டது. மேலும், முஸ்லிம்களின் ஆளுமை உறுதியாக நிலைபெற்றுவிட்டது. போருக்குப் பிறகு, ஹுஸைஃபா அவர்கள் ஓமனிலேயே தங்கிவிட்டார்கள். மேலும், அங்குள்ள நிலைமையை சீரமைத்தல் மற்றும் அமைதி,சமாதனத்தை ஏற்படுத்துதல் ஆகியவற்றில் மூழ்கி விட்டார்கள். ஏற்கனவே கூறப்பட்டதுபோன்று, அர்ஃபஜஆ போர்செல்வங்களை எடுத்துக் கொண்டு மதீனாவுக்குச் சென்றுவிட்டார்கள். ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்கள் தமது படையை உடன் அழைத்துக் கொண்டு மஹ்ராவின் குழப்பங்களை முடிவு கட்டுவதற்காப் புறப்பட்டுவிட்டார்கள்.

ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்கள், முர்தத் ஆன கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக நடத்திய போர்களைப் பற்றி வருகிறது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஒரு கொடியை ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்களுக்குக் கொடுத்தார்கள். மேலும், அவர்களுக்கு முஸைலமாவை எதிர்கொள்ளுமாறு ஆணையிட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இக்ரிமாவை முஸைலமாவோடு போர் புரிய யமாமாவுக்கு அனுப்பி வைத்தார்கள். மேலும், அவர்களுக்குப் பின்னால் ஹஸ்ரத் ஷரஹ்பீல் பின் ஹஸனாவையும் யமாமாவுக்கு அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், அவர்கள் இருவரிடமும் யமாமா என்ற பெயரை கூறினார்கள். ஆயினும், ஷரஹ்பீல் வந்தடையாத வரை போரிடக் கூடாது என்று இக்ரிமாவிடம் கூறினார்கள்.

ஆனால், ஏற்கனவே கூறப்பட்டுவிட்டது போன்று ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவசரப்பட்டுவிட்டார்கள். ஷரஹ்பீல் வருவதற்கு முன்னாலேயே முன்னேறிச் சென்று தாக்குதல் நடத்திவிட்டார்கள். முஸைலமா, அவர்களை பின்னுக்குத் தள்ளிவிட்டான். தோற்று பின்னால் சென்று விட்டார்கள். இந்த நிகழ்வைப் பற்றிய தகவல் ஹஸ்ரத் ஷரஹ்பீல் பின் ஹஸனா (ரலி) அவர்களுக்குக் கிடைத்தபோது, அவர்கள் இருந்த இடத்திலேயே தங்கிவிட்டார்கள்.

உங்களுக்கு என்னுடைய மறு கட்டளை வரும் வரை நீங்கள் யமாமாவிலலேயே தங்கியிருங்கள் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஷரஹ்பீல் (ரலி) அவர்களுக்கு எழுதினார்கள். இது ஏற்கனவே கூறப்பட்டுவிட்டது. இப்போது நான் உங்களது முகத்தைப் பார்க்கவும் மாட்டேன். ஆனால், நீங்கள் ஏதாவது சிறந்த பணியை செய்து காட்டும் வரை, ஏதாவது அசாதாரணமான பணியை செய்து காட்டினால் சரி! என்னிடம் வாருங்கள். பிறகு, அன்னார் கூறினார்கள்: நீங்கள் ஓமன் செல்லுங்கள். ஓமன் வாரிசுகளுடன் போரிடுங்கள். ஹுஸைஃபா மற்றும் அர்ஃபஜஆ ஆகியோருக்கு உதவி புரியுங்கள். எவ்வாறு இருப்பினும், ஏற்கனவே கூறப்பட்டதுபோன்று ஓமன் பாரசீக வளைகுடாவின் ஒரு பகுதியாக இருந்தது. அதில் அந்த நாள்களில் இன்றைய ஐக்கிய அரபு எமிரேட்களின் கிழக்கத்திய பகுதிகளும் அடங்கியிருந்தன. அங்கு சிலை வணக்கம் செய்யும் கோத்திரமான அஸது மற்றும் பிற கோத்திரங்கள் இருந்தன. அவர்கள் தீயை வணங்குபவர்களாக இருந்தார்கள். மஸ்கத், ஸுஹரா, துபா ஆகியவை இதன் கரையோர பகுதிகளாக இருந்தன.

அன்னார் இதையும் கூறியிருந்தார்கள்: உங்களில் ஒவ்வொருவரும் தங்களது குதிரை வீரர்களின் தலைவராக இருப்பார். ஆயினும், நீங்கள் ஹஸ்ரத் ஹுஸைஃபா (ரலி) அவர்களின் கண்காணிப்பின் கீழ் உள்ள பகுதிகளில் இருக்கும் வரை அவர்கள் உங்கள் அனைவருக்கும் அமீராக இருப்பார்கள். நீங்கள் அங்கு பணியை முடித்துவிட்ட பிறகு, மஹ்ரா சென்றுவிடுங்கள். பிறகு, அங்கிருந்து ஏமன் சென்றுவிடுங்கள். எதுவரை என்றால், ஏமன் மற்றும் ஹிஸ்ர் மௌத் உடைய போர் நடவடிக்கைகளில் முஹாஜிர் பின் உமய்யாவுக்குத் துணை நில்லுங்கள். மேலும், ஓமனுக்கும், ஏமனுக்கும் நடுவில் எவர்கள் எல்லாம் முர்தத் ஆகிவிட்டார்களோ அவர்களை தண்டியுங்கள். மேலும், போரில் உங்களின் சிறந்த பணிகளைப் பற்றிய தகவல் எனக்குக் கிடைத்துக் கொண்டே இருக்கட்டும். இவ்வாறு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வழிகாட்டல் வழங்கினார்கள்.

எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் இக்ரிமா அவர்கள் புறப்படுவதற்கு முன்னர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வழிகாட்டலுக்கு ஏற்ப ஹுஸைஃபா பின் முஹ்ஸின் கல்ஃபானீ ஓமனுடனும், அர்ஃபஜஆ பார்க்கீ மஹ்ராவுடைய முர்தத்களோடும் போர் புரிய புறப்பட்டு விட்டிருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கட்டளைப் படி, இக்ரிமா அவர்கள் தமது படையுடன் அர்ஃபஜஆ மற்றும் ஹுஸைஃபாவுக்குப் பின்னாலேயே சென்றார்கள். அவர்கள் இருவரும் ஓமனுக்கு சென்றடைவதற்கு முன்னரே இக்ரிமா, அவர்களை சென்றடைந்தார்கள்.

இதற்கு முன்னர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், அவர்கள் இருவருக்கும் இவ்வாறு வலியுறுத்தி கட்டளையிட்டிருந்தார்கள். அதாவது, ஓமனில் பணி முடிந்த பிறகு, அவர்கள் இக்ரிமாவின் கருத்துப்படி செயல்பட வேண்டும். அன்னார், அவர்களைத் தம்முடன் அழைத்துக் கொண்டாலும் சரி! அல்லது ஓமனில் தங்குவதற்கு கட்டளை இட்டாலும் சரி!

எவ்வாறு இருப்பினும், ஏற்கனவே கூறப்பட்டதுபோன்று இந்த மூன்று அமீர்மார்களும் ஓமனுக்கு அருகில் உள்ள ரிஜாம் எனும் இடத்தில் ஒன்று கூடியபோது, அவர்கள் ஜேஃபர் மற்றும் அப்பாதிடம் தங்களுடைய தூதுவரை அனுப்பினார்கள்.

மறுபுறம், அவர்களின் படை வருவது பற்றிய தகவல் லகீதுக்குக் கிடைத்தபோது, அவன் தனது கூட்டத்தினரை ஒன்று கூட்டினான். துபாவில் வந்து முகாமிட்டான். ஜேஃபர் மற்றும் அப்பாதும் கூட, தத்தமது தங்கும் இடங்களிலிருந்து வெளியேறினார்கள். அவர்கள் ஸுஹார் எனும் இடத்திற்கு வந்து முகாமிட்டார்கள். நீங்கள் அனைவரும் எங்களிடம் வந்துவிடுங்கள் என்று கூறி ஹுஸைஃபா, அர்ஃபஜஆ மற்றும் இக்ரிமா ஆகியோருக்கு தூது அனுப்பினார்கள்.

ஆக, ஏற்கனவே கூறப்பட்டதுபோன்று அவர்கள் அனைவரும் அந்த இருவரிடமும் ஸுஹாரில் ஒன்று கூடினார்கள். மேலும், தம்மோடு இணைந்திருந்த பகுதிகளை முர்தத்கள் இல்லாத பகுதிகளாக ஆக்கிவிட்டார்கள். எதுவரை என்றால், அவர்களது சுற்றுவட்டாரத்தில் இருந்த எல்லா மக்களுடனும் சமரசம் ஏற்பட்டுவிட்டது. மேலும், அந்த தலைவர்கள் லகீத் உடைய தோழமைத் தலைவர்களுக்கு கடிதங்கள் எழுதினர்.

ஏற்கனவே கூறப்பட்டதுபோன்று, இதன் விளைவாக தலைவர்கள் லகீதை விட்டுப் பிரிந்துவிட்டார்கள். இதற்குப் பிறகு, லகீத் உடைய படையோடு முஸ்லிம்களுக்குக் கடுமையான போர் நடைபெற்றது. மேலும், அதன் விவரம் முன்னரே வந்துவிட்டது.

இந்தப் போருக்குப் பிறகு, இக்ரிமா அவர்களும் ஹுஸைஃபா அவர்களும் இந்தக் கருத்தில் உடன்பட்டார்கள். அதாவது, ஹுஸைஃபா (ரலி) அவர்கள் ஓமனிலேயே தங்கி, பிரச்சனைகளைத் தீர்க்க வேண்டும். மேலும், மக்களுக்கு அமைதியை ஏற்படுத்தித் தர வேண்டும். மேலும், ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்கள் முஸ்லிம்களின் பெரும் படையோடு மற்ற இணைவைப்பாளர்களை தண்டிப்பதற்காக முன்னோக்கி சென்றுவிட்டார்கள். அவர்கள் மஹ்ராவிலிருந்து தமது போர் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பித்தார்கள்.

ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்கள் மஹ்ரா கோத்திரத்தின் பக்கம் முன்னோக்கிச் சென்றது பற்றி இவ்வாறு வருகிறது: ஓமனின் முர்தத்களுக்கு தண்டனை வழங்கி முடித்த பிறகு, இக்ரிமா அவர்கள் தமது படையை அழைத்துக் கொண்டு நஜ்த் பகுதியின் மஹ்ரா கோத்திரத்தை நோக்கிப் பயணமானார்கள்.

இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: அவர்கள் ஓமன் மற்றும் ஓமனின் சுற்றுவட்டார மக்களிடம் தமது இந்தப் போர்ப் படைக்காக உதவி கோரினார்கள். அவர்கள் சென்றுகொண்டே இருந்தார்கள். எதுவரை என்றால், மஹ்ரா கோத்திரத்தின் பகுதியைச் சென்றடைந்து விட்டார்கள். அவர்களுடன் பல்வேறு கோத்திர மக்கள் இருந்தார்கள். இறுதியில், இக்ரிமா அவர்கள் மஹ்ரா கோத்திரம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் தாக்குதல் தொடுத்துவிட்டார்கள்.

அவர்களை எதிர்கொள்வதற்காக மஹ்ரா மக்கள் இரண்டு

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 7 Thursday 28 July 2022 Issue No. 30

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

குழுக்களாகப் பிரிந்துவிட்டார்கள். ஒரு குழு ஜேரூத் எனும் இடத்தில் ஷக்ரீத் என்பவரின் தலைமையில் அகழியில் இருந்தது. இரண்டாவது குழு பனூ முஹாரிபுடைய ஒரு நபர் முஸப்பா என்பவனின் தலைமையில் இருந்தது. உண்மையில் ஷக்ரீத் மற்றும் அவனது கூட்டம் தவிர மஹ்ரா முழுவதும் இதே படையின் தலைவனின் கீழ் செயல்பட்டது. இந்த இரு தலைவர்களும் ஒருவர் மற்றவருக்கு எதிராக இருந்தனர். ஒருவர் மற்றவரை தம்மிடம் அழைத்து வந்தனர். மேலும், அவ்விரு படைகளில் ஒவ்வொருவரையும் அவர்களின் தலைவருக்கே வெற்றி கிடைக்க வேண்டும் என்று விரும்பினர்.

இந்த விஷயத்தின் மூலமாகவே அல்லாஹ் முஸ்லிம்களுக்கு உதவி செய்தான். மேலும் அவர்களை, அவர்களின் பகைவர்களுக்கு எதிரில் வலிமை பெறச் செய்தான். மேலும் பகைவர்களை பலவீனமாக்கி விட்டான். இக்ரிமா அவர்கள் ஷக்ரீத்துடன் குறைவான எண்ணிக்கையில் மக்களைப் பார்த்தபோது, அவர்கள் அவனுக்கு இஸ்லாத்திற்கு திரும்பி வருமாறு அழைப்பு விடுத்தார்கள். அவன் முதலில் முஸ்லிமாக இருந்தான். மீண்டும் முஸ்லிம் ஆகிவிடு. முஸ்லிம்களுடன் போர் புரியாதே என்று அன்னார் (ரலி) கூறினார்கள். ஆக, ஆரம்பத்தில் கூறப்பட்ட அந்த விஷயத்திலேயே ஷக்ரீத், அன்னாரின் அழைப்பை ஏற்றுக் கொண்டுவிட்டான்.

மேலும், இவ்வாறு அல்லாஹ் முஸப்பாவை வலுவிழக்கச் செய்துவிட்டான். பிறகு, இக்ரிமா அவர்கள் முஸப்பாவிடம் தூதுவரை அனுப்பினார்கள். மேலும், அவனுக்கு இஸ்லாத்தின் பக்கம் திரும்பி வருமாறும், நிராகரிப்பிலிருந்து விலகுமாறும் அழைப்பு விடுத்தார்கள்.

ஆனால், அவனுடன் இருந்த மக்களின் எண்ணிக்கையின் பெரும்பான்மை அவனுக்கு ஏமாற்றத்தை அளித்துவிட்டது. ஷக்ரீத் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதால் முஸப்பா மற்றும் ஷக்ரீத்துக்கு இடையில் தொலைவு இன்னும் அதிகரித்துவிட்டது. எவ்வாறு இருப்பினும், இக்ரிமா (ரலி) அவர்கள் அவனை நோக்கி முதலில் சென்றார்கள். ஷக்ரீத்தும் அன்னாருடன் இருந்தார். அவர்கள் இருவருக்கும் நஜ்த் பகுதியில் முஸப்பாவோடு போர் நடைபெற்றது. அவர்கள் அங்கு துபாவில் நடந்ததை விட மிகவும் கடுமையாக போர் புரிந்தனர்.

அல்லாஹ் முர்தத்களான கிளர்ச்சியாளர்களின் படைக்குத் தோல்வியை வழங்கினான். மேலும், அவர்களின் தலைவன் கொல்லப்பட்டான். முஸ்லிம்கள் ஓடியவர்களை விரட்டிச் சென்றார்கள். மேலும், அவர்களில் பலரை கொன்றுவிட்டனர். மேலும், பலர் சிறைபிடிக்கப்பட்டனர். மேலும், போர்ச் செல்வங்களில் ஈராயிரம் உயர்தர பெண் ஒட்டகங்களும் முஸ்லிம்களின் கைகளுக்கு வந்தன.

ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்கள் போர்ச் செல்வங்களை ஐந்து பாகங்களாகப் பிரித்தார்கள். ஐந்தில் ஒரு பங்கைக் கொடுத்து ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் ஷக்ரீத்தை அனுப்பினார்கள். மீதமிருந்த நான்கு பாகங்களை அன்னார் (ரலி) முஸ்லிம்கள் மத்தியில் விநியோகித்துவிட்டார்கள்.

இவ்வாறு ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்களுடைய படை பயண விலங்குகள், செல்வங்கள் மற்றும் பொருட்களினால் மேலும் ஆற்றல் பெற்றதாகிவிட்டது. ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்கள் அங்கேயே தங்கியிருந்து அந்தப் பகுதியின் மக்கள் அனைவரையும் ஒன்றுதிரட்டினார்கள். மேலும், அனைவரும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்கள் அந்த வெற்றியின் நற்செய்தியை சாயிப் என்று அழைக்கப்படும் ஒருவர் மூலம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்ளிடம் கொண்டு சேர்த்தார்கள். பிறகு, ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்கள் ஏமனை நோக்கி முதலில் அடியெடுத்து வைத்தது பற்றி கூறப்படுகிறது.

ஏற்கனவே கூறப்பட்டது போன்று, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது கடிதத்தில் ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்களுக்கு இவ்வாறு வழிகாட்டல் வழங்கினார்கள்: மஹ்ராவுக்குப் பிறகு, ஏமனுக்கு சென்றுவிடுங்கள். ஏமன் மற்றும் ஹிஸ்ர் மௌத் உடைய போர் நடவடிக்கைகளில் ஹஸ்ரத் முஹாஜிர் பின் உமய்யாவுக்குத் துணை நில்லுங்கள். மேலும், ஓமனுக்கும், ஏமனுக்கும் நடுவில் எவர்கள் எல்லாம் முர்தத் ஆகிவிட்டனரோ அவர்களை தண்டியுங்கள். ஆக, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் இந்த வழிகாட்டலை செயல்படுத்திய வண்ணம் மஹ்ராவிலிருந்து ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்கள் புறப்பட்டுச் சென்றார்கள். எந்த அளவிற்கு என்றால், அன்னார் (ரலி) அபீன் வரை சென்றடைந்துவிட்டார்கள். அபீன் என்பதும் ஏமனின் ஒரு நகரமாகும். அவர்களுடன் மிகப் பெரிய படை ஒன்று இருந்தது. அதில் மஹ்ரா கோத்திரம் மற்றும் பிற கோத்திரங்களின் பல மக்கள் இணைந்திருந்தார்கள். ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்கள் முழுமையாக தெற்கு ஏமனிலேயே தங்கினார்கள். அங்கு நகா மற்றும் ஹமீர் கோத்திரங்களை தண்டிப்பதில் ஈடுபட்டிருந்தார்கள். வடக்கு ஏமனை நோக்கிச் செல்ல வேண்டிய நிர்பந்தமே வரவில்லை.

ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்கள் நகா கோத்திரத்தின் ஓடிச் சென்ற மக்களைப் பிடித்த பிறகு, அந்தக் கோத்திர மக்களை ஒன்றுகூட்டினார்கள். மேலும், இஸ்லாத்தைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? என்று அவர்களிடம் கேட்டார்கள். அந்த மக்கள் இவ்வாறு கூறினர்: அறிவீன காலத்திலும் நாங்கள் மார்க்கவாதிகளாக இருந்தோம். மார்க்கத்துடன் எங்களுக்கு ஈடுபாடு இருந்தது. அரேபியர்களான நாங்கள் ஒருவர் மற்றவர் மீது தாக்குதல் தொடுக்க மாட்டோம். ஆக, எந்த மார்க்கத்தின் சிறப்பைப் பற்றி நாங்கள் அறிந்து கொண்டோமோ அதன்மீதான அன்பு எங்கள் உள்ளங்களில் ஊடுருவி விட்டது. அந்த மார்க்கத்தில் நுழைந்துவிட்ட பிறகு எங்களின் நிலை இவ்வாறு இருக்கும். அதாவது, இஸ்லாத்தின் மீதான நேசம் இப்போது எங்களின் உள்ளத்தில் ஊடுருவி விட்டது.

தமிழாக்கம் : மவ்லவி அதாவுல் முக்னீ

( தொடர்ச்சி அடுத்த இதழில்.............. )

## திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய்தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A. Basheer Ahmad (Sec. Waqf-e-Jadid, Melapalayam)

**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

**தொலைபேசி எண் : 1800 103 2131**
இந்த ***TOLL FREE*** எண்ணில்
∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.
தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை
(வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

O.A. NIJAM
99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT
99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad